போன் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4642

திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 27—2—55 | இதழ் 34

'பொழுதுபோக்காளர்கள்!'

தமிழ் முழக்கம் எங்கும்! கேட்காத இடமில்லை, இப்போது!!

தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு—தமிழ் வளர்த்த 'தாத்தா'வுக்கு நூற்றாண்டு விழா—தம்பிரான்களின் நன்கொடை—நாவலருக்கு 'டாக்டர்' பட்டம்—இராமாயணப் பதிப்பு—அமைச்சர்களின் ஆதரவுவெள்ளம் — அதைவிட ஏடுகளில், பெரிய இடம்! இனி, என்ன வேண்டும் தமிழுக்கு?

எங்கும், தமிழ் மணம்! தமிழ்முழக்கம்! — இதுவரை செய்தவைகளுக்கு 'கழுவாய்' தேடுவதுபோல, காட்சிகள். மகிழ்கிறோம்; இந்தளவுக்கு, ஒரு எண்ணம், ஏற்பட்டிருப்பது காண.

இந்த மகிழ்ச்சி நமக்கு மட்டுமல்ல, கவர்னர் பிரகாசாவுக்கும் கூட உண்டாகியிருக்கிறது. நாம் எல்லாம் அண்ட முடியாத அடையாறு தேவியின் "கலா க்ஷேத்ரத்தில்" (வாழ்க தமிழ்!) நடைபெற்ற விழா ஒன்றில், விவரித்திருக்கிறார்-"தமிழில்இப்போது ஏற்பட்டிருக்கும் புது விழிப்பு, மகிழ்ச்சிக்குரிய ஒன்று. எழுத்திலும், பேச்சிலும் ஏற்பட்டிருக்கும் இந்த விழிப்பு, தாய் மொழிகளுக்கு ஊக்கம் தரும்" என்பதாக.

விழிப்பை, எந்த வகையில் அறிந்தாரோ? கவர்னர்! பேசியிருக்கிறார்!!

அவர், வெளியூர் ஆள். ஆகவே, நமது திருப்திக்கும் உபசாரத்துக்கும், நாலு வார்த்தை சொல்லும் எண்ணத்தில் கூடப் பேசியிருக்கலாம். ஆனால், அமைச்சர் சுப்ரமணியம் இருக்கிறாரே, அவருக்குக் கூட இந்த விழிப்பு, இப்போதுதான், ஏற்பட்டிருக்கிறது!!

பச்சையப்பன் கல்லூரியில், மாணவ நண்பர்கள் பேசியதைக் கேட்டாராம்—'அடடா! எப்படிப் பேசுகிறார்கள் தமிழில்!!' — என்று பூரித்துப்போயிருக்கிறார்.

போகுமிடம் எங்கும் பேசுகிறார், "தமிழே இனி எம் தாரக மந்திரம்! சகலரும் தயாராகுங்கள்!! பல்கலைக் கழகங்களே, பாடங்களை தமிழில் போதியுங்கள். தாமதித்தால், சட்டம் கொண்டுவருவேன்" என்றெல்லாம் சொல்லுகிறார்.

அப்படியே, அமைச்சர் பக்தவத்சலம் கூடச் சொல்லுகிறாராம்.

என்ன ஆச்சரியம், பாருங்கள்! தமிழில், பாடங்களை நடத்தவேண்டும் என்கிற 'பேருண்மை'யை, அமைச்சர்களும் தெரிந்துகொண்டுவிட்டார்கள்! அதற்கு, தோள்தட்டி, சல்லடம் கட்டப் போகிறோம் என்றும் சொல்லுகிறார்கள்! தமிழ் நாட்டில்—தமிழ் மொழிக்கு — தமிழறிந்தவர்களிடம்—இவ்வளவு காலத்துக்குப் பிறகு, விழிப்பும் வீரமும், தோன்றுகிறது! வாழ்க, அவர்கள் மொழிப்பற்று! வாழ்க அவர்தம் மனவளம்!!

இப்படி, இவர்கள் பேசுவதைக் கேட்கும்போது, சும்மாயிருக்கமுடியுமா—அன்பர் ஆச்சாரியாரால்.

அதுதானே, அவருடைய வாழ்க்கையிலேயே, கூர்ந்து கவனிக்கப்பட்டு வரும் பாகம்.

அதனால்தான் சொல்லுகிறார்-நம்முடைய மாணவிகள் ஆங்கிலத்தில் அப்படிப் பேசுகிறார்களாம். சீடர், பச்சையப்பனில் தமிழ் மணம் கண்டேன் என்கிறார். குரு, எதிராஜ் கல்லூரியில், 'இங்கிலீஷ் இன்பம் கண்டேன்' என்கிறார். இங்கிலீஷ்மீது, எப்போது ஏற்பட்டது, இந்தக் காதல்? ஆச்சாரியார் மனதைத்தான் கேட்கவேண்டும்.

அதோடு விடுவாரா? — ஒரு அரிய புத்திமதியும் தெரிவிக்கிறார், "அவசரப்பட்டு அரசாங்க மொழியாக தமிழை ஆக்கவேண்டும் என்று பேசுவதற்கு முன்னால், தமிழின் தரத்தை உயர்த்த வேண்டும். ஏனென்றால், தமிழ் இன்னும் எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையில் உள்ளது. அதுமட்டுமில்லாமல், நம்முடன் வாழும் கன்னட மலையாள சகோதரர்களைப்பற்றியும் யோசித்துப் பார்க்கவேண்டும்" என்று சொல்லுகிறார்.

இரண்டும் உண்மையே. தமிழில், பல புதுச் சொல்லாக்கம் தேவைப்படுகிறது. அதேபோல, சென்னை அரசில் வாழும் கன்னட, மலையாள மக்களையும் அலட்சியப்படுத்திவிடமுடியாது. ஆந்திரம் பிரிந்த பிறகும், சென்னை சட்டசபையில், மலையாள, கன்னடப் பிரதிநிதிகள் இல்லாமல் இல்லை.

இதனை, அவர் உணர்த்தித்தான் தெரிந்துகொள்ளவேண்டியது என்றில்லை — எல்லோரும் அறிவார்கள். தமிழில் கலைச்சொல்லாக்கம் வேண்டுமென்பதையும், பிறருக்கு அதனால் தொல்லை ஏற்படக்கூடாதென்பதையும் அறியாதவர்களா, பிறர்? ஆயி

(16-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க.

மாநில மாநாடு

திருச்சியில்

ஜூன் திங்களில்

தொடர் சித்திரம்

கடிகாரம்

14

அண்ணல்

"உயிரை விடுவதற்காக மரக்கிளையை நாடிய நான் கண்ட காட்சி என்னவாயிருக்கும்? நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்!", என்று என்னைக் கேட்டாள், நாச்சி.

நான் யோசித்தேன, "இதென்ன நாச்சி! என்னைக் கேட்டால், எனக்கென்ன தெரியும். சொல்லு கதையை!", என்றேன்.

"சொல்லுகிறேன்! கடிகாரம், ஏது எனக்கென்று தெரிந்துகொண்டீர்கள். அது தெரிவதற்கு முன், அப்பப்பா, என்மீது எவ்வளவு கோபம் வந்தது உங்களுக்கு. கத்தியை விரித்துக்கொண்டு பாய்ந்தீர்களே. ஆத்திரம் அலைமோதிற்றே, மனதில்! அந்த மனதால், என்ன காட்சியைக் கண்டிருப்பேன், என்று யோசித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்."

"என்ன கண்டிருப்பாய்? ஏதாவது, பணமூட்டை கிடந்ததோ, நீ ஆச்சரியப்படக்கூடிய வகையில்"

"அப்படி கிடைத்திருந்தால், இங்கு வந்து இட்லி வியாபாரமா செய்துகொண்டிருப்பேன்......"

"அல்லது, ஏதாவது ஒரு பெரிய பாம்பு உன்னை நோக்கிப் பாய்ந்து வந்திருக்கும். அதைக்கண்டு திகில் அடைந்திருப்பாய்."

"நன்றாயிருக்கிறது! நான் தான் உயிரைவிட மார்க்கம் தேடியவளாயிற்றே. பாம்புக்கு ஏன் பயப்படப் போகிறேன்."

"எனக்குத் தெரியவில்லை, நாச்சி! நீயே, சொல்லு. அப்படி, என்ன கண்டாய், அங்கே!"

"என்ன கண்டேன் தெரியுமா? நானே ஆச்சரியப்படக்கூடியகாட்சியைக் கண்டேன்! எந்த ஒரு மனிதனால் என் வாழ்க்கை இவ்வளவு அலங்கோலமாயிற்றோ, அந்த மனிதனைக் கண்டேன், அங்கே!"

"யார், ஜெயமணியையா?"

"ஆமாம்! அவனைத்தான் கண்டேன. அதுவும் எப்படி? அழகான கிராப், கதர்ச்சட்டை, வீரமொழிகள், ஆகியவைகளோடா—அல்ல, அல்ல. நான் ஆச்சரியப்படக்கூடிய விதத்தில், கண்டேன் அவனை! கடவுள் பேரைச் சொல்லி வாழும் கயவர்கள்—போலிச் சாமிகள்—போக போக்கியத்தில் திளைக்கும் மதப்புலிகள் என்றெல்லாம் எந்த மடாதிபதிகளைப் பற்றிப் பேசுவானோ அந்த மடாதிபதிக்குக் கைகட்டி தண்டனிடும் அசல் பக்தனாக அவன் நின்ற காட்சியை, அன்றோர் நாள், என் அப்பா இறந்தபோது, அவனுடைய அப்பா புதுவீடு கட்டி புகுவிழா நடத்தியபோது கண்டேன்! அதைவிட அதிசயமான காட்சி, இது. எதிரே ஓடிக்கொண்டிருந்த ஓடம்போக்கியைத் தாண்டி நானிருக்கும் இடம் நோக்கி, பலர் வந்தார்கள், ஒரு பல்லக்கைத் தூக்கிக்கொண்டு! தண்ணீரில், இறங்கி, அந்தப் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு தாண்டி வந்தார்கள். அதனுள், சிங்கார மடத்து ஜகத்குரு, கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் வந்த பலருடன், ஜயமணியும் வந்தான். தலையில் மொட்டை! ருத்ராட்சக் கொட்டை! விபூதிப்பட்டை! தேவாரம் பாடியோரும், மூவாதி மூவர்களை நாடியோரும்கூடத் தோற்றுவிட வேண்டும். அப்படி விளங்கினான்! பக்திப்பழம், காவியாடை; அடடா, என்ன கனிவு!—முகத்தில். பல்லக்கு வந்துகொண்டிருந்தது—பாவம், பல ஏழைகள் அதைத் தூக்கிக்கொண்டு, ஆற்றில் இறங்கியதால் உடம்பெல்லாம் தண்ணீர் சொட்டச்சொட்ட, நனைந்த ஆடைகளோடு, 'ஆகும்! ஆகும்!' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

சுமைதாங்கியின்மீது நின்ற எனக்கு, என்னைக் கண்டுவிடுவார்களோ—எனும் நினைப்பு எழுந்தது. இறங்கி, பட்டுப்போன ஆலமரத்தின் ஒரு பக்கத்திலே மறைந்து கொண்டு, பார்த்தேன். பல்லக்கு, போகிறது! பக்தனாகச் செல்லுகிறான், ஜெயமணி!! அப்படியே பாய்ந்து அவனைக் கீறி, சக்கை சக்கையாக வீசி எறிந்து விடவேண்டும் போலிருந்தது. என்ன அதிசயம்! இதே சிங்கார மடத்தைத்தான், தன்னுடைய கொள்கைகளைப் பரீட்சை பார்க்கும் இடமாக்கினான்—அங்கிருந்த சொத்துக்களைக் கொண்டு அழகான வீடு, எழுப்பிவிட்டார், அவன் அப்பா!—அவனுடைய அரசியல் வேகத்துக்குப் பலியான பரிதாபச் சின்னமாக நான் இருக்கிறேன்—பல ஏழை விவசாயிகளோ, சிறையில் கிடக்கிறார்கள் இன்னும்—சுப்பியோ, தானும் குழந்தையுமாக ரயிலுக்கு இரையானாள்—இத்தனை புயலுக்கும் காரணமான ஜெயமணியோ, புதிய உருவிலே போய்க்கொண்டிருக்கிறான், எதிரில்! அவனது வேஷங்களை வெளிப்படுத்தக் கூடிய கடிகாரம், சிங்கார மடத்திலிருந்து அவன் திருடிய கடிகாரம் அவன் திருவிளையாடல்களையெல்லாம் உலகுக்கு உணர்த்தும் கடிகாரம், என்னிடம். இருந்து என்ன பிரயோசனம்? யார், நம்புவார்கள் என் வார்த்தையை! சிங்காரமடத்து ஜகத்குருவின் சிஷ்யனான, பக்திமான் ஜெயமணி எங்கே—நான் எங்கே! பல்லக்குப போன பிறகு, என்மனதில் ஏற்பட்ட குமுறல்களெல்லாம் ஒருவாறு அடங்கியது. ஏன் நான் சாக வேண்டும்? இப்படிப்பட்ட பல போலிகள் நாட்டில் நடமாடும்போது அந்தப் போலிகளை நம்பி மக்கள் ஏமாறும்போது, நான் எதற்காக சாக வேண்டும்? என்றாவது, ஒரு நாள் இவனுடைய போலி வேடங்களை அம்பலமாக்காமல் விடப் போவதில்லை! அதை எப்படியாவது நிறைவேற்றி, இந்த எத்தனைப் பழிவாங்காமல் விடக்கூடாது—என்று, ஆவேசம் வந்தது எனக்கு.

"அடீ! பைத்யம், நீ, பெண். உன்னால், என்ன முடியும்? மறுபடியும் ஏமாந்து, 'சிக்க'ல் நிகழ்ச்சிபோன்ற

ஏதற்காவது ஆளாகி, சிறையும் கஞ்சிக் கலயமுமாகத்தான் அலைய நேரும்! உனக்கென்ன — ஊரும் உலகமும் எப்படிப்போனால் உனக்கென்ன. உன் வாழ்க்கை பட்ட மரமாகிவிட்டது! இனிமேல் இந்த உலகில் நீ வாழ முயன்றால், முட்ட வரும் மாடுகள் ஏராளம் உண்டு! ஏனிந்த சபலம்? ஒரே முடிவுதான் உன் போன்ற பெண்களுக்குண்டு! ஓடிடும் ஆறோ, ஆடிடும் மரக்கிளையோ, ஊதிச்செல்லும் ரயில் வண்டியோ தான் உங்களுக்கெல்லாம் துணை"—என்றது என்மனம்.

எந்த முடிவுக்கு வருவது, என்று தெரியாதவளாக, நடந்தபடியே யோசித்துக்கொண்டு இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன்—சாகவேண்டும் என்று மனதில் எழும்பிய ஆசை தணிந்து எப்படியாவது வாழ வேண்டும், என்றாவது ஒரு நாளைக்கு ஜெயமணியைப் பழி வாங்க வேண்டும் என்கிற எண்ணம் மட்டும் மன ஆழத்தில் கிடந்தது. அதனால்தான், பக்கத்து ஊரான இங்கே தங்கினேன்— இட்லி சுட்டுவிற்கும் வியாபாரத்திலீடுபட்டேன் — உங்களைச் சந்தித்தேன். பிறகுதான் உங்களுக்குத் தெரியுமே! போதுமா, இந்தக்கடிகாரத்தைப் பற்றிய கதை? அடிக்கடி, சிங்காரமடத்துக்குக் கூப்பிடுவீர்களே என்னை! நான் ஏன் போக விரும்புவதில்லை என்பது இப்போது விளங்கிற்று! அடிக்கடி பாடுவேனே, பாட்டு "உண்மையில் கடவுள் உண்டோ! இல்லையோ!!" எதற்காக, என்று இப்போது தெரிகிறதா? சரி! படுங்கள். நேரம், அதிகமாகிவிட்டது! — என்று கூறியபடியே, என் மார்மீது சாய்ந்தாள், நாச்சி.

எனக்கோ, தூக்கம் வரவில்லை. மனம், நினைவு, எல்லாம் சிங்கார மடத்தையே வட்டமிட்டது.

"இன்னும், அந்த ஜெயமணி அங்கேதான் இருக்கிறானா, நாச்சி?"

"அங்கேதான் இருக்கிறான்! அவன்தான், இப்போது ஜகத்குருவுக்கு அடுத்த குருவாம்!"

"அப்படியென்றால், நாச்சி......... அவனுடைய அட்டகாசங்களை நீயும் நானும் போய், ஜகத்குருவிடம் சொல்லுவோம்......"

"ஏழைகள் பேச்சு அம்பலம் ஏறாது! ஏனிந்த எண்ணம்? அவ்வளவுதான், இந்தக் கடிகாரத்தின் முள் சுற்றி சுற்றி வருவதுபோல, ஒவ்வொருவரும் அவர்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு, சாகும் வரையில் இருந்துவிடவேண்டியதுதான். தள்ளுங்கள்"

எப்படித் தள்ள முடியும்? என் நாச்சி, பாபம், ஒருவனால் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறாள்! அவன், வேறு எப்படியிருந்தாலும் கவலையில்லை—மக்கள் போய்க் கும்பிடும் மடாலயத்தின் சீடனாகவல்லவா, இருக்கிறான்? எவ்வளவு பெரிய அக்ரமம்! இப்படிப் பட்ட போலிச் சாமிகள் இருப்பதால்தானே, பலபேர், சாமியாவது பூதமாவது என்றெல்லாம் பேசுகிறார்கள். ஜகத்குருவிடம் போய், நாச்சி சொல்லிய சகல விஷயங்களையும் தெரிவித்து, அந்த நாசகாலனை, மடத்திலிருந்து விரட்டிவிடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன். நாளை முதல், அதுவே முக்கியமான வேலை என்று மனதுக்குள் முடிவுசெய்து கொண்டு, நாச்சியை அணைத்துக் கொண்டேன். மூடிய விழிகளைத் திறந்து, பார்த்தாள், என்னை! அவள் விழிகளைச் சந்தித்தன என் கண்கள்! ஓசையில்லாதபாஷைகள் பேசிக்கொண்டன. பிறகு என்ன நடந்தது, என்பதையுமா, உங்களுக்குச் சொல்லவேண்டும்?

* * *

"பாதாமாம்! பாலாம்! பல்லக்காம்! பக்திப் போர்வையில் பரமானந்தத்தை அன்றோ அனுபவிக்கிறார், குருநாதர். ஏண்டா, மூடா! நீயும் தானிருக்கிறாய், இந்த மடத்தில். என்ன பயன் கண்டாய்? காலை முதல் மாலைவரை குருநாதர் என்ன செய்கிறார் என்பது உனக்கு, நன்றாகத் தெரியும். கொட்டு முழக்கும், வேட்டுச் சத்தமும், 'அரகரநமப்பார்வதிபதே'யும், பக்தர்கள் காதைச் செவிடாக்க முடியும். உன் கண்ணால் காண வில்லையோ, இங்கு நடக்கும் காட்சிகளை? மண்ணும் பொன்னும் வெறுத்ததாகப் பேசுகிறார்! ஆனால், நிலமோ, ஏராளம் இருக்கிறது, குருவுக்கு. பொன்னோ!— கணக்குவழக்கில்லை. அணிந்திருக்கும் ஆடையோ, தங்கநாலிட்டு, இடையில் பட்டு ஓட பளபளக்கிறது! விரலில் கிடக்கும் சிறு மோதிரத்தைக் கொண்டே ஒரு குடும்பம் காலத்தை நகர்த்திவிட முடியும். மார்பிலும், காதிலும்தொங்கும் ஆபரணங்களையோ, கணக்கிட உனக்கும் தெரியாது. நானும் அறியேன். பெயரோ, சிங்காரமடம். நாமோ, ஆண்டிகள்"

"என்ன செய்வது! எம்பெருமான் ஈசன், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், அவரை அப்படிப் படைத்துவிட்டான். நம்மை, இப்படிப் படைத்துவிட்டான்."

"நல்ல ஆளப்பா நீ! இதை, காலை

ஆசிரியர்கள் அல்லல்

மேற்கு வங்க சர்க்கார், ஒரு நற்காரியம் செய்துவருகிறதாம்.

ஆரம்ப ஆசிரியர்களின் மைந்தர்களுக்கு, கல்லூரி வரையில் சம்பளம் இல்லாமல், படிக்கும் வசதியைத் தந்திருக்கிறார்களாம்.

இதனால், பலர், விரும்பி ஆசிரியர்களாகிறார்களாம், அங்கே — இதனை, 'இந்து'வில், கடிதம் தீட்டி, ஒருவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இங்கே, ஆரம்ப ஆசிரியர்களின் நிலை எப்படியிருக்கிறது?—இதோ, தோழர் வீரராகவன் கூறுகிறார். 'ஆரம்பக்கல்வி'யின் ஆசிரியர் அவர். அண்மையில், போடிநாயக்கனூரில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில், ஆரம்ப ஆசிரியர்களின் நிலைபற்றி அவர் கூறியதை, அரசுக்கு வைக்கிறோம்:—

"ஆசிரியத் தொழிலை வாயளாவ உயர்த்திப்பேசிவிட்டு, அதே நேரத்தில், அந்தத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வயிறார உண்பதற்குக்கூடப் போதாத சம்பளத்தைத் தந்துவருவது, மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும். என்றைய தினம் ஆசிரிய உலகத்துக்கு இழைக்கப்படும் இந்த அநீதி அழிக்கப்படுகிறதோ, என்றைய தினம் ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 75 என்று ஏற்படுகிறதோ, என்றைய தினம் அந்த ஆசிரியத் தோழர்களின் குடும்பங்களிலே குதூகலமும், உள்ளங்களிலே உற்சாகமும் நடமாடத் தொடங்குகிறதோ, என்றைய தினம் அவர்கள் கண்களிலே புது ஒளியும், முகங்களிலே புன்முறுவலும் காணப்படுகிறதோ, அன்றைய தினம்தான் நாட்டுக்கு நற்காலம் பிறக்கும் தினமாகும்"!

யிலும் மாலையிலும் வந்துபோகும் அடியார்களிடம் சொல்லு. ஆகா! ஊகூ!—என்பார்கள். ஈசன் எழுதினும், தலையில்! இந்தியாவில் பிறக்கும் குழந்தைகள் தலையில் தான் பரமசிவன் எழுதுகிறுன்...... உலகத்திலுள்ள மீதி 150 கோடி மக்கள் தலையிலும் யார் எழுதுகிறுர்கள்......"

"நமது கடவுள், எங்கும் நிறைநாதப் பிரம்மமல்லவோ?"

"ஆமாம், உனக்குத்தான் எங்கும் நிறைநாதப்பிரம்மம். இந்த இந்தியாவுக்கு வெளியில் போய்விட்டால், இந்தக் கடவுள்கள் பெயர்கூடத் தெரியாது......"

"நிஜமாவா?"

"நிறூபசத் தெரியும் உனக்கு. இதெல்லாமா, புரியும்!"

"நீ, ரொம்ப விஷயம் தெரிஞ்சு வச்சிருக்கே—சாமி!"

"அதனுல்தானே, ஜகத்குருவே, என்னைக்கண்டால் கொஞ்சம் மிரள்கிறுர்."

"ஆமாமாம்! அடிக்கடி நானும் கவனிச்சேன்......"

"நீ, கவனித்ததுமட்டும் போதாது. நான் சொல்லுகிறபடி ஒரு உதவியும் செய்துவிட்டால்... ......"

"என்ன உதவி, சாமி!"

"உரக்கச் சொல்லக்கூடாது — அருகிலே, வா!..........என்ன, புரிந்ததா?"

"ஐயோ!"

"ஆமாம், அஞ்சாதே. எல்லாம் நான் கவனித்துக்கொள்ளுகிறேன் ...."

"நாளைக்காலையிலேயா?"

"ஆமாம்! நாளைக்காலையில்!! நடு ஆற்றில்!!!"

* * *

இரண்டுபேரும், இப்படிப் பேசிக் கொண்டிருந்தனர், மறுநாள் மாலையில் சிங்கார மடத்துக்குச் சென்று நான் பார்த்தபோது—நாச்சி சொன்ன அடையாளங்களைக் கொண்டு ஒருவன், ஜெயமணி என்று தெரிந்துகொண்டேன். இன்னெருவன்? அவனும், அந்த மடத்தைச் சேர்ந்த சாமியார்களில் ஒருவனுகத்தானிருக்கவேண்டும்! அவர்களிருவரும் சேர்ந்து, நாளைக் காலையில் நட்டாற்றில், என்னசெய்யப் போகிறுர்கள்? — அவர்களிருவரும் பேசிக்கொண்டதை இரகசியமாகக் கேட்டேன். ஆனுல், காதுக்குள் இரகசியமாகச் சொன்னது என்ன! "நாளைக் காலையில்......? நட்டாற்றில்......?", என்ற வார்த்தைகளே, ஒலித்தன. நான் வந்ததோ, ஜகத்குருவைக் கண்டு, நாச்சி சொன்ன விபரங்களைச் சொல்லவேண்டுமென்று! ஜகத்குருவோ, அடியார்களுக்கு 'அருள் உபதேசம்' செய்து கொண்டிருந்தார். அதனுல், நான், மடத்தின் பக்கமாக சுற்றிவந்து கொண்டிருந்தபோது, இவர்களிருவரும் பேசுவதைக் கேட்டேன். நாளைக்காலையில்! நடு ஆற்றில்!!— என்ன, செய்யப்போகிறுர்கள், இந்த ஜெயமணியும், அவன் சகாவும். அதைப்பற்றியே நினைத்தபடி, திரும்பினேன் வீட்டுக்கு — விடிவதற்கு முன்னரே வந்து பார்க்க வேண்டும், என்கிற எண்ணத்துடன். (வளரும்)

அது, ஏனே!

—::—

1,500 ரூபாய்க்குமேல் ஆண்டு தோறும் வருமானம்பெறும் காபி, டீ, ரப்பர், முதலிய தோட்டத் தொழில் சொந்தக்காரர்களுக்கு வரி விதிக்கும் சட்டம் ஒன்றை சென்னை சர்க்கார் செய்திருக்கிறது.

வரவேற்கக்கூடிய சட்டம் என்பதால், எதிர்க்கட்சியினர்கூட, சட்டத்தை ஆட்சேபிக்கவில்லை. உண்மையில் நாட்டின் மேடும் பள்ளமும் சமமாகவேண்டும் என்று கருதும் எவரும் இத்தகைய சட்டம் கூடாதென்று கூறுர்.

அதிக வருமானம்பெற்றவண்ணம் ஆனந்தத்தில் ஆழும், நிலப்பிரபுக்களுக்கு வரிமேல்வரிபோட்டு, அவர்கள் வசம் அதிகப் பணம் சேராமல் செய்தால், அந்தப் பணத்தைக்கொண்டு நாட்டுக்குவேண்டிய நன்மைகளைச் செய்ய இயலும்.

அதனுல்தான், நிலப்பிரபுக்களின் 'கொள்ளை'க்கும் வருமானவரி போடவேண்டும் என்று, நீண்டகாலமாக, நாம் எல்லாம் வலியுறுத்தி வருகிறோம்.

சென்னையில், தோட்டத்தொழில், சுமார் மூன்று லட்சம் ஏக்கர் நிலத்தில் நடைபெறுகிறது. இதனுல், இரண்டு லட்சம் தொழிலாளர்கள், வயிறு வளர்த்துக்கொண்டு, உள்ளனர். இந்தத் தொழிலில் போடப்பட்டிருக்கும் மூலதனத்தின் மொத்தத் தொகை, சுமார் எட்டுக் கோடியாகும்.

ஆனுல், இந்தத் தொழிலில், ஈடுபட்டிருக்கும் பிரபுக்களில் பெரும்பாலோர், வெள்ளையர்களாகும்.

அவர்களுக்கு வரும் அமித லாபத்துக்கு, வரிபோடும் வகையில், இப்படியொரு சட்டம் வந்தது மிக மிக வரவேற்கக்கூடியதாகும்.

இதைக் கொண்டுவந்த மாணிக்கவேலர், மிகவும் மன உற்சாகத்தோடு பேசியிருக்கிறுர். எதிர்க்கட்சியினர் காட்டிய ஆதரவுக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டிருக்கிறுர்.

இப்படியொரு சட்டம், காங்கிரஸ் அரசால், தென்னுட்டில் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டதென்றுல், அதற்குக் காரணம், இங்கே வளர்ந்திருக்கும் சமதர்ம கீதமேயாகும்!

நன்றி! பாராட்டுவோம்!!—இந்தளவுக்காவது துணிவு ஏற்பட்டமைக்கு.

ஆனுல், இந்தச் சட்டம் தோட்டங்களுக்குமட்டுமே தவிர, ஆயிரக்கணக்கான பண்ணைகளுக்கு அல்ல!

நாட்டிலிருக்கும் வடபாதி மங்கலங்களுக்கும் திருவாவடு துறைகளுக்கும் அல்ல, இந்தச் சட்டம். அவர்களுக்கு வருகிற வருமானங்களுக்கு, வரி கிடையாது! கொள்ளை, நீடிக்கும்!

"இது, ஏன்?" என்பதைத்தான் நமது கொள்கை முழக்கும் ஆத்தூர் சுப்ரமணியம் போன்ற சட்டசபை உறுப்பினர்கள், கேட்டிருக்கின்றனர், சட்டசபையில்.

தோட்டத் தொழில்களைவிட, கொட்டமடிக்கும் நிலப்பிரபுக்கள் ஏராளம் இருப்பது, கழனிகளில் தான்! அவர்களுடைய வருமானத்துக்கு வரிபோட்டால் — சர்க்கார் கஜானுவுக்கு, பணம், ஏராளமாக வரும்!

அதை ஏனே? — அவசரத்துக்குரிய விஷயம் என்று, நினைக்கவில்லை, அரசு.

படிப்படியாகச் செய்வோம்—என்கிறுர், அமைச்சர்.

இந்தப் படிக்கட்டுக்கு வரவே வருடம் இத்தனை ஆயிற்று. அந்தப் படிக்கட்டுக்கு வர, ஆண்டுகள் எத்தனை ஆகுமோ, என்று ஏங்குகிறுன் விவசாயி.

என்று நிறைவேறுமோ, அவன் ஆசை! அதுவும் சரியாக நிறைவேறுமோ, என்னவோ!! ★

இரண்டுக்குமிடையே

★ அல்லாடுகிறார்கள் ★

தாயொரு பக்கம்; தாசி ஒரு பக்கம்—இடையிலே தவிக்கும் தனயர்களைப்போல இருக்கிறது, இன்றைய காங்கிரஸ் அமைச்சர்களின் நிலை.

கண்ணீரைக் காட்டுகிறாள், தாய்; கனிரசவல்லியோ புன்சிரிப்பால் பொசுக்குகிறாள் — இரண்டுக்கும் இடையிலே அகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றனர்.

*

"தாசியின் நேசம் என்ன சதமா? பத்து மாதம் சுமந்து பெற்ற தாயினும் சிறந்ததோர் கோயிலுண்டோ! ஏனிப்படி பராமுகமாயிருக்கவேண்டும்? பரத்தையின் உறவால் பயன் என்ன பெறமுடியும். வா, தம்பி, வேண்டாம் இந்த நேசம். அன்னையைப் பார். அவள் மனம் நோகப் பேசினால், அதுவே எரிமலையாகும். அவள் மனங் கலங்காமல் நடப்பது தானே மனிதர்களுக்கு அழகு"

"மகா அழகைக் கண்டுவிட்டாய் எல்லாம் எங்களுக்குத் தெரியும் தாய்க்காக என் தளிர்க் கொடியை விரட்டமுடியுமா? நீ இப்படிப் பேசியதையும் — அதை நான் கேட்டேனென்பதையும் — அவள் கேள்விப்படுமுன் போய்விடு. அவள் காதுக்கு எட்டிவிட்டால், கதவு மூடப்பட்டுவிடும். கண் கலங்க வேண்டி நேரும், நான்"

*

மோக லாகிரி, பையனின் தலையைப் பலமாகப் பிடித்தாட்டுகிறது என்று தானே சொல்லுவீர்கள். அத்தகைய 'மோகம்' தங்களுக்கிருக்கிறது எனும் விவரத்தை அமைச்சர் சுப்ரமணியம் அள்ளி வழங்கியிருக்கிறார்.

சட்டசபையில், கம்யூனிஸ்டுத் தோழர்கள், ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தனர்—

அஞ்சவேண்டாம்; சமூகத்தின் கோளாறுகளை நீக்கும் பொருளாதார மசோதா அல்ல — பொதுவுடைமையே நாட்டின் கொள்கை என்று அறிவிக்கும் சட்டம் செய்ய அல்ல—ஒருநாள் விடுமுறை விடச் சொல்லி.

அப்படி விடுமுறைவிட்டால், 'அவர்கள்' மனதில் ஐயத்துக்கு இடம் ஏற்படுமாம்.

'முதலாளிகள்' மனதில், ஐயத்துக்கு இடம் ஏற்படுமாம்! ஆமாம், அமைச்சர்தான் அறிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளின் தீர்மானத்தை மறுக்க வேறு காரணம் எதுவும் காட்டவில்லை, அமைச்சர். "இதனை ஏற்றுக்கொண்டால் வர்க்கபேதங்களை சர்க்காரும் ஏற்றுக்கொண்டதாகப் பொருளாகும். எனவே, இதனை அனுமதிக்கக் கூடாது," என்று, மறுத்துவிட்டார்.

தொழிலாளி! முதலாளி!—எனும், வர்க்கபேதங்களை, அங்கிகரித்ததாக ஆகிவிடுமாம். அமைச்சர், அஞ்சுகிறார்.

மே தினம்!—உலகப் பாட்டாளி மக்களின் விடுதலை தினம்.

பொதுவுடைமை பேசுவோரானாலும், சமதர்ம கீதம் பாடுவோரானாலும், அந்தத் தினத்துக்குள்ள அருமையை உணராமலில்லை — உலக முழுமைக்கும், ஒரு தினம், கொண்டாடப்படுகிறது என்று சொன்னால், அது, மேதினம்,தான்.

அத்தகைய மேதினத்தை—மே முதல்நாளை — பொது விடுமுறை நாளாக விடவேண்டுமென்பது, தோழர்களின் தீர்மானம்.

அது, கூடாதாம்! ஏனெனில், அப்படிச் செய்தால் வர்க்கப் போராட்டத்துக்கு 'சர்க்காரும்' அங்கீகாரம் அளித்ததாகிவிடுமாம்!

வர்க்கப் போராட்டம், சர்க்கார் அங்கிகாரத்துக்கு, காத்துக்கொண்டிருக்கும் என்பது 'கனத்தின்,' கருத்துப்போலும்! இந்த தர்மதாதா அங்கிகரித்தால்தான், அது, ஏற்படும்—இல்லையென்றால், பேசாமல் அடங்கிக் கிடக்கும், என்று எண்ணம்போலும், அமைச்சருக்கு.

அப்படிப்பட்ட ஜாரையே கவிழ்த்திருக்கிறது! அணுகுண்டு வைத்திருக்கும் அமெரிக்காவையே, அந்த வர்க்கப்போராட்டம், அலறச் செய்கிறது! சுப்ரமணியம், எந்த மூலை?—ஆயினும், அச்சம் மனதைக் குடைகிறது! அதனால், இப்படிச் சொல்கிறார்!

தொழிலாளர்களின் 'உரிமை தினத்தை', அங்கிகரித்தால், முதலாளிகள் கேட்பார்களல்லவா, "என்ன, சார்! இந்தத் தொழிலாளப் பசங்க பக்கம்,'நீங்க நடக்கிற மாதிரித் தெரியுதே!", என்று. அந்தப் பயம்.

முதலாளிகளின் கேள்வி. என்ன அஸ்திரமா, ஆளைக்கொல்லும் பீரங்கியா?—என்று கேட்பீர்கள், நீங்கள்! உங்களுக்கென்ன, தெரியும் அதன் அருமை? தாயே பெரிதென என்னும் தனயர்கள், நீங்கள்; அவர்களைப்போல, தாசியின் மோகனாஸ்திரங்களைத் தாங்கிய பழக்கம் ஏது உங்களுக்கு!

மக்களைப் பற்றிய எண்ணத்தைவிட, பணதிக்கத்தினரைப் பற்றிய கவலையே, அதிகம் வருகிறது அமைச்சருக்கு — சகஜம்தான்! விமானத்தில் பறந்துபோய் காங்கிரஸ் மாநாட்டுக்கு, லட்சம் ரூபாய் பெற, பல்லைக் காட்டியது அவருக்கல்லவா தெரியும்! அதனால்தான், அவ்வளவு சிரத்தையோடு, சாதாரண மேதினம் கொண்டாட 'சர்க்கார்' சம்மதிப்பது, எங்கே அவர்கள், மனதில் ஐயத்தை உண்டாக்கிவிடுமோ என்று அஞ்சுகிறார்! தாசியின் காதுக்கு எட்டினால், கதவு சாத்தப்பட்டுவிடுமே, என்று கலங்கியவனைப்போல!

*

தாய்—உலகையே உய்விக்கும் அன்னையிருக்கிறாளே, மண் மாதா—அவளை நம்பி வாழும் குடியானவர்களைப்பற்றி, சென்னை சட்டசபையில், கடந்த சில நாட்களாக ஒரே முழக்கம். திராவிட பார்லிமெண்டு கட்சியினர், கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள்—ஏன்? முஸ்லீம் லீகினர்கூட — ஒரே கூட்டணியாக நின்று, ஒரு மசோதாவைப்பற்றி, வற்புறுத்தியிருக்கிறார்கள். அதி

அங்கு !

புதிய நாடகங்களை எழுதுவோருக்கு உற்சாகம் தந்தும், திறந்த வெளி தியேட்டர்கள் கட்டியும் நாடகத் தொழிலுக்கு உதவுவதற்காக சுமார் இரண்டரை லட்சம் ரூபாயைச் செலவழிக்க பம்பாய் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். கேளிக்கை வரி மூலம் கிடைத்த தொகையாகும், இது.

சயமாயிருக்கிறதே என்பீர்கள் — ஆமாம்! அதனைப்பற்றிக் கேட்டால் 'அவசியம்தானே' என்றும் சொல்வீர்கள்—ஆனால், அதை அமைச்சர் சுப்ரமணியம் ஏற்பாரா? என்ன ஆவது 'மாதிரி சோஷியலிசம்'? அதனால் மறுத்துவிட்டார்.

மணலி கந்தசாமி, ஒரு மசோதா கொண்டுபோனார் — நாட்டில் தரிசாகக் கிடக்கும் நஞ்செய புஞ்செய் புறம்போக்கு நிலங்களிருக்கிறதே அவைகளையெல்லாம், ஏழைகளுக்கும், இல்லாமையால் வாடும் ஆதித்திராவிடருக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று. நமது தோழர் திருவொற்றியூர் சண்முகம் இருக்கிறாரே, அவர் ஒரு படி மேலேகூடப் போய் பேசினாராம், "புறம்போக்கு நிலம் என்னய்யா? கோயிலுக்கும், பண்டார சன்னதிகளுக்கும் சொந்தமாகக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான இடங்களைக் கூட ஏழை எளியவர்களுக்குப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்களய்யா" என்றாராம். ஆனால், கம்யூனிஸ்டுகள், 'அந்தப் பக்கம்'கூடப் போகவில்லை. புறம்போக்கு நிலங்கள், சர்க்காருக்கு சொந்தமானவையென்று கருதப்படுவதாகும். அவைகளை, நிலம் இல்லாதோருக்கு அல்லது கொஞ்சம் நிலம் வைத்திருப்போருக்கு ஆளுக்கு ஒரு ஏகர்–அரை ஏகர் என்று பிரித்துக் கொடுக்கலாம் என்பதே தீர்மானம். இந்தக் காரியத்தைச் செய்ய, இந்த சர்க்காருக்கு நேரம் இருக்கிறதோ இல்லையோ என்பதால், தாசில்தார்–அந்த வட்டாரத்து எம். எல். ஏ–மாவட்ட போர்டு மெம்பர் ஆகியோரைக் கொண்ட கமிட்டியின்மூலம் இந்த நற்பணியைச் செய்யலாம் என்றும் கூறியிருந்தனர்.

நிலமில்லா ஏழைகள்! அவர்கள் வசம், கறம்பு நிலங்கள்!—ஏதோ, எப்படியோ, அவர்கள், அதில் பாடுபட்டு, ஒரு வழிதேடிக்கொள்வார்களல்லவா?

அது கூடாதாம், அமைச்சருக்கு மனதில் ஆயாசம் வழிந்தோட ஆரம்பித்து, "அய்யோ! மக்களுக்கு இப்படி நிலங்களைப் பிரித்துக் கொடுக்கச் சொல்லுகிறீர்களே? 'கூடாது?' என்று சொல்லும் கொடும் பாவியென்று மக்கள் கூறும்படியான நிலைமைக்கு எங்களைக் கொண்டுபோய் விடுகிறீர்களே? இந்த மசோதாவை நாங்கள் விரும்பவில்லை. ஏன், தெரியுமா? இப்படி, கறம்பு நிலத்தையா, நமது மக்களுக்கு பங்கிட்டுக்கொடுப்பது—அப்படிக் கொடுத்தால் நீர்ப்பாசனத்துக்கு அவர்கள், என்ன செய்வார்கள்? நீர்ப்பாசனத்துக்கான வழிகளைச் செய்துகொடுத்து, பிறகல்லவோ, நிலங்களைத் தரவேண்டும்" என்று ஒரு 'முகாரி' பாடி, அந்த மசோதாவை நிராகரித்திருக்கிறார். என்ன கருணை! என்ன அன்பு மக்கள்மீது!

இவர், இப்படிப் பேசி, அந்த மசோதாவை தட்டிக் கழித்துவிட்டாரா! அவருடைய சகா, மாணிக்கவேலர், அதே சட்டசபையில் மற்றோர் மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்கியிருக்கிறார் — அதுவும், 'பூமியை'ப் பற்றியதுதான். அமைச்சர், சுப்பிரமணியம், நீர்ப்பாசன வசதியில்லாமல் தரிசு நிலங்களைப் பகிர்ந்துகொடுக்கலாமா?–என்றாரல்லவா! மாணிக்கவேலர், கொண்டுவந்து சட்டமாக்கிய மசோதா, "நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களிலிருந்து வருமானம் பெறவாகும்." அபிவிருத்தி மீது வரி! புதிதாக 1947-லிருந்து ரூ 25000-க்குமேல் செலவழித்து, விவசாயிகளுக்கு ஏதாவது நன்மைகள் செய்து கொடுத்திருந்தால், அந்த விவசாயிகளிடமிருந்து, செய்துகொடுத்த நன்மைக்காக பணம் வாங்குமாம், சர்க்கார். ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 700 வரை, வசூலிக்குமாம்! எப்படி, இது? செய்துகொடுத்த 'அபிவிருத்திக்காக' ஸ்பெஷல்வரி–இதனால், சர்க்கார், இதுவரை நிலவரி வாங்காமலிருந்ததோ என்று எண்ணுகிறீர்கள். அது, ஒரு பக்கம்! இது, இன்னோர் பக்கம்! அப்படியொரு மசோதாவைக் கொண்டுவந்து, சட்டமாக்கியிருக்கின்றனர்.

*

பக்தவத்சலம் இருக்கிறாரே தொழில் மந்திரி; அவர் மேல்சபையில், மிகவும் அனுதாபத்தோடு பேசியிருக்கிறார். யாரைப்பற்றி? முதலாளிகளைப் பற்றித்தான். சென்னை சட்டசபையில் தோட்டத் தொழில்களின் வருமானத்தின் மீது வரி விதிக்கும் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களிலிருக்கும் டீ, காப்பி, மிளகுபோன்ற. தோட்டத்தொழில்கள்மீதுதான், வரி! அதனை, எதிர்க்கட்சியினரும், ஏற்றுக்கொண்டனர்—முதலாளிகளிடமிருந்து, ஏதோ கொஞ்சமாவது வரிவசூலிக்கும் மனம் வந்திருக்கின்றதே, என்பதால்! பலருக்கு ஒருமனக்குறை.'இன்னும் அதிகமாக வரி போட்டால் என்ன?' என்று. சிலருக்கோ, அது பெரிய திருப்தி, 'பரவாயில்லை சர்க்கார் இந்த அளவோடு, விட்டுவிட்டதே' என்று. அந்தச் சிலர், சர்க்காரின் பெருந்தன்மையைப் பாராட்டினர்; பணம படைத்தவர்கள்தான்! அதற்குப் பதிலளித்த பக்தவத்சலம், மிகவும் மகிழ்ந்திருக்கிறார்.

விதவைகள் இல்லாத நாடு

நேப்பாள நாட்டில் வசிக்கும் பழங்குடிகளான நீவார்களுக்குள், விதவை நிலைமை கிடையாது. இவர்கள் நேபாளத்தின் மிகப் பழைய குடிகள். இவர்களுடைய அடிநாள் வரலாறு யாருக்கும் தெரியாது. நேப்பாளத்தை கூர்க்கர் கைப்பற்றி ஆளுவதன் முன்னர் இவர்கள் அந்த நாட்டை ஆண்டனர். பழைய தலைநகரங்களான பத்தான் பத்காங் வட்டாரங்களில் இப்போதும் இவர்கள், தச்சுவேலை, கட்டட வேலை, விவசாயம், உலோக வேலை, வர்ணச் சித்திரம் தீட்டுதல், துணிகளில் பூவேலை செய்தல், சித்திரம் பின்னல் வேலை ஆகியவற்றில் கை தேர்ந்தவர்கள். இவர்கள் புத்த நெறியினர்; வணிகப் பெருமக்கள். பெண்கள் வயதுற்றதும் மணமுடித்து வைக்கப்படுவர். இத்திருமண வாழ்க்கை சுமுகமாக இல்லாவிட்டால், அப்பெண்ணே மணவிலக்குச் செய்துகொண்டுவிடலாம். மணவிலக்கு முறையும் மிக எளிது. ஒரு கொட்டைப் பாக்கை கணவன் தூங்கும் தலையணைக்கடியில் வைத்துவிட்டு அப்பெண் அக்கணவன் வீட்டைவிட்டு வெளியில் வந்து, தன் தகப்பன் வீட்டுக்குச் சென்றுவிடுவாள், இவ்விதம் மணவிலக்குச் செய்ததும் அவள் மறுபடியும் கன்னியாகவே கொள்ளப்படுவாள். அவள் வேறொருவனை மணந்துகொள்ளலாம். மணந்த கணவனுடன் தொடர்ந்து வாழ்க்கை நடத்தி, அப்போது அக்கணவன் இறந்துவிட்டால் அப்பெண் விதவையாகக் கருதப்படமாட்டாள்; கன்னியாகக் கொள்ளப்படுவாள். மறுமணம் செய்துகொள்ளலாம். இந்த மணம் விதவை மறுமணமாகக் கொள்ளப்படமாட்டாது; முதல் திருமணம் நடத்தப்படுவதுபோன்றே இதுவும் நடத்தப்படும்.

★

தனிப்பட்ட பிரபுக்களை இம்சிப்பது சர்க்காரின் நோக்கம் அல்லவென்று தெளிவாக்கியிருக்கிறார்! அவசியம் தெளிவாக்கவேண்டிய விஷயம் தானே? இல்லையென்றால், என்ன ஆவது, 'மாதிரி' சோஷியலிசம்!

சட்டசபையில் 'ஒரே குளறுபடி' மயமாக இன்னொரு சட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதுவும் பூமியன்னை சம்பந்தமானதுதான். அதாவது, கடன் நிவாரணச் சட்டம் என்று பெயர். ஏழை விவசாயிகளின் கடன் தொல்லையை நிவாரணம் செய்யும் சட்டம் அல்ல; ஏதோ ஒரு சட்டம்.

அதாவது, கடன்பட்டிருக்கும் விவசாயிகள் வருகிற மார்ச்சி லிருந்து நாலு மாதத்துக்குள் தாங்கள் பட்ட கடனின் வட்டியையோ அல்லது கடனில் எட்டில் ஒரு பாகத்தையோ கொடுத்துவிட்டு, மீதிக் கடனை மூன்றாண்டுக்குள் செலுத்திவிடவேண்டும் என்பது.

இதனால் என்ன இலாபம்? — கடன் கொடுத்தவர்களுக்கு மூன்றாண்டுகளில் பணம் கிடைத்துவிடும் என்கிற உறுதி ஏற்படுகிறதே ஒழிய, ஏழை விவசாயிகளுக்கு என்ன இலாபம்?

இதனையே, பல சட்டசபை மெம்பர்கள் கேட்டிருக்கின்றனர். நமது தோழர் எம். பி. சுப்பிரமணியம் இதற்கு ஒரு திருத்தம் கொடுத்தாராம், "ஐயா, மூன்று ஆண்டுகள் என்பதை குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளாக ஆக்கலாமே" என்று. ஏற்பார்களா? மறுத்துவிட்டார்கள்.

இந்தச் சட்டம்பற்றி சட்டசபையில், பெரிய தலைவேதனையாயிருந்ததாம் அமைச்சர்களுக்கு. கடைசியில், நிதியமைச்சர் சுப்ரமணியமே எழுந்து, "இது, ஏழை விவசாயிகளுடைய கடனைப் போக்குகிற சட்டம், அல்ல. ஏதோ, ஒரு சிறு உதவி செய்வதுபோல. அந்தளவில்தான் செய்கிறோம். என்ன செய்வது?" என்று 'முகாரி'யும் பாடியிருக்கிறார்.

*

இப்படி, சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன! அதாவது, ஏழை மக்களின் தலையை உருட்டும்படியான, பல சட்டங்கள் 'ஐயோ, அவர்கள் வாழ கொஞ்சம் இடமளிப்போமே?'' என்றால், அதற்கு சீற்றம்.

ஆனால், அவர்களுக்கு நன்மை செய்வதுபோல, இன்னொரு சட்டம். அதிலும், பணக்காரர்கள் புரியினருக்கே, வசதி!

பணக்காரர்களிடமிருந்து வரி வசூலிப்பதுபோல, ஒரு சட்டம்—அது, அதிகமாயில்லையே என்று ஏழைகளின் சார்பில் கேட்டால், அதற்குக் கோபம்.

ஏழை மக்களுக்கு பாசன வசதி செய்ததற்காக, பரிசு கேட்பது போல, ஒரு சட்டம். இப்படியேன், என்று கேட்டால், நாடு முன்னேற வேண்டாமோ?—என்று பதில்.

இப்படி, ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையிலே நமது காங்கிரஸ் அமைச்சர்கள் அல்லாடுகிறார்கள்.

அதன் பிரதிபலிப்பே, சபையில் பல தடவைகளில் சுப்ரமணியம் பணிந்து பணிந்து பேசியது.

'தாய் போன்றவர்கள்' மக்கள். அரசுகள் வாழ்வதும் நீடிப்பதும், அவர்களை வாழ்விக்கத்தான் என்பது, ஒரு சமயத்தில் தெரிகிறது. அது நியாயம் என்றும்படுகிறது.

ஆனால், அதே சமயத்தில், தங்களைத் தாசர்களாக்கிக்கொண்டிருக்கும் பணக்காரர்களின் கவனமும் வருகிறது.

தாய் ஒரு பக்கம்! தாசி இன்னொரு பக்கம்!— தவிக்கிறார்கள்.

இதற்குப் பெயர்தான், "சோஷியலிச மாதிரி.....," என்றும் சொல்லுகிறார்கள்.

இந்த மாதிரியான சோஷியலிசம் இருப்பதைவிடக் குழிதோண்டி புதைப்பது, எவ்வளவோ மேல்!

நிலம்—நம் அன்னை.

அது, காலிலும் கையிலும் விலங்கு பூண்டு கிடக்கிறது.

அதை விடுவித்து வாழ்வளிப்பதை விடுத்து, அதை நம்பிக்கிடக்கும் மக்களின் மனதிலும் விழியிலும் ஒளிபூக்கச் செய்வதைவிட, இப்படிச் சட்டங்கள் கொண்டு வருகிறார்கள்—சாக்கடைக்கு, சந்தனம் தெளித்து, நறுமணம் உண்டு பண்ணுவதுபோல!

இப்படிச் செய்வதால், நாற்றமும் போகாது; நாடும் புதுநிலையை அடையாது.

அதற்கு மனோ உறுதியும், மக்களை நமது தாய் என்கிற எண்ணமும் மலரவேண்டும். எப்படி. மலரும்? மேதினவிழாவுக்கு விடுமுறைவிட்டால் 'வர்க்கப் போராட்டத்தை' அங்கீகரித்தது ஆகிவிடுமோ என்றல்லவா அலறுகிறது அரசு. இதன் ஆட்சியில் நீதியும் நேர்மையும் எப்படிச் சாத்தியமாகும்.

தாய் தவிப்பாள்; தாசி வாழ்வாள். மக்கள் வாடுவர்; பிரபுக்கள் வாழ்வர்—இதைத் தவிர வேறு எதையும் காணமுடியாது.

'ஆவடி சோஷியலிசமாதிரி'யின் அடிப்படையே இதுதான்.

★

'உரிமைக் குரல்'

இலங்கை—கொழும்பிலிருந்து நமது கொள்கைகளைத் தாங்கி, தோழர்கள் நா. பழனிநாதன், வி. எஸ். முருகன் ஆகியோரை ஆசிரியர்களாகக்கொண்டு வெளிவரும் திங்கள் இதழ். விலை அணா 2, முகவரி:- 69—1, பீர்சாகிபு வீதி கொழும்பு.

'டில்லி'யின் பரிசு!

அடிக்கடி பிரயாணம் செய்பவர்கள் யார்? சராசரி மக்கள்தானே! அவர்களுக்கு, ரயில்வேயினர், இந்த ஆண்டும் 'பரிசு' வழங்கத் தவறவில்லை. 'டிக்கெட்' கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றனர்! நீண்டதூரம்—300 மைல்களுக்குமேல்—பிரயாணம் செய்யும் 'ஏழைகள்'பால் அனுக்ரகம் செய்து அவர்களது 'டிக்கட்' கட்டணங்களைக் குறைத்திருக்கிறார்கள். சராசரியினரின் 'டிக்கெட்'டை உயர்த்தியிருக்கிறார்கள்! சுயராஜ்யம் மலர்ந்தபிறகு, இப்படி, பல தடவைகள் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு, இன்று ஏழைகளுக்கு பெரிய சுமையாய் இருந்துவருகிறது, இந்தச் சுமையைக் குறைப்பதற்குப் பதில், அதிகமாக்குகின்றனர், டில்லியினர். ஏழைக் குடியானவர்கள், உழைத்து வாழ்வோர், மத்தியதர மக்கள் முதலியோருடைய வருமானம் குறைந்துகொண்டிருக்கிற நேரம்இது! விவசாயப் பொருள்களின் விலைகள் எல்லாம் இறங்கிக்கொண்டிருக்கின்றன! ஆனால், அவர்களது போக்குவரத்துக்கு மிகவும் உபயோகமாயிருக்கும், ரயில்வேயில் 'டிக்கட்' உயர்த்தப்படுகிறது. இதுதான் டில்லியின், 'சோஷியலிச மாதிரி'யின் லட்சணம் போலும்! ★

திராவிடநாடு

காஞ்சி] 27—2—55 [ஞாயிறு

வருகிறது, மார்ச் 20

தேயும் தெற்கு, வளரும் வடக்கு—என்று நாம் சொல்லியபோதெல்லாம் கேலியும் கிண்டலும் செய்தோரே, இன்றைய தினம் பெருமூச்சுடன் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

முதல் மந்திரிகளாயிருந்த ஓமந்தூரார் சொன்னார், குமாரசாமிராஜா கூறினார், ஆச்சாரியாரும் தெரிவித்தார், இப்போது மந்திரிபீடத்திலிருக்கும் சுப்ரமணியம் ஆயாசத்தோடு கூறுகிறார்; ஆவடி மாநாட்டிலேயே அக்குமுறலை தோழியர் அம்புஜம்மாள் எடுத்துச்சொன்னார்.

அந்தளவுக்கு, அந்தப் பிரச்னையின் உண்மையும் அளவும், அரசியலில் உள்ள அனைவருக்கும் தெரிய ஆரம்பித்துள்ளது.

அதிலும், ஐந்தாண்டுத் திட்டம் தீட்டி ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதாகச் சொல்லப்படும் போது, அந்தப் பணத்தால் தெற்கு பெறுகின்ற பலனையும் பயனையும் எண்ணிப் பார்த்தால், பதட்டமடையாதோர் இருக்கமுடியாது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் ஊழல்கள் எவ்வளவோ இருந்தாலும், அதற்காகச் செலவிடப்படும் பணத்தில், நியாயமான பங்கு இங்கேயும் செலவிடப்படவேண்டும் என்று கேட்க நமக்கு உரிமை உண்டு. ஏனெனில், தொழில்துறையில் பின்தங்கிக் கிடப்போர் நாம்; அதே வேளையில் ஏராளமானவரி செலுத்திக்கொண்டும் இருப்போர்.

"இப்படி, நாம் தொழில்துறையில் பின்தங்கி இருப்பதற்கு டில்லிமட்டுமா காரணம்?"—இவ்வண்ணம் கேட்போரும் உண்டு. அவர்களுக்கு ஒரு சம்பவம்-அண்மையில் நடந்த சம்பவம்.

சென்னையில் பேனாக்களுக்குப் போடும் 'இங்கி' தயாரிப்பதற்காக, வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றுக்கு டில்லி, அனுமதியளித்தது. இந்த அனுமதி கூடாது—எங்கள் தொழிலை நாசமாக்குவதாகும், என்று இங்கேயிருக்கின்ற 'இங்கி' தயாரிப்பாளர்கள் சென்னை சர்க்காரிடம் 'மகஜர்'கொடுத்தனர். சென்னை சர்க்காரும், டில்லி சர்க்காருக்கு நிலைமையை விளக்கி, இங்குள்ள இங்கி தயாரிப்போருக்கே முதலிடம் தரவேண்டுமென்று சிபார்சு செய்தது. ஆனால், டில்லி, ஏற்கவில்லை! வெளிநாட்டாருக்கே அனுமதி கொடுத்தது! ஏன்? என்று கேட்டதற்கு, "பார்க்கர் பேனாக்களுக்கு இங்கேயுள்ளவர்களால் தயாரிக்கப்படும் 'இங்கி' தகுதியாக இல்லை. அதுமட்டுமின்றி, இப்படியொரு வெளிநாட்டார் ஸ்தாபனம் இருந்தால்தான், உள்ளூரிலிருக்கிறவர்களுக்கும் தரமான இங்கியைத் தயாரிக்க வேண்டும் என்கிற ஆசையேற்படும்"—இவ்வண்ணம், டில்லி கூறிவிட்டதாம்! விபரம், சென்னை அமைச்சர் பக்தவத்சலம், சட்டசபையில் கொடுத்தது!

ஒரு இங்கி ஆலைக்கு, மாநில அரசு, மன்றாடியும் அனுமதி தரவில்லை, டில்லி அரசு. அப்படியொரு அலட்சியம் அன்றுமுதல் இன்றுவரை காட்டப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக, ஒன்றல்ல, இரண்டல்ல, எவ்வளவோ நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்ட முடியும்.

இப்படியொரு மனோபாவம் வடக்கேயிருக்கும்போது, தெற்கு எப்படி வளர முடியும்? வடக்கே கட்டப்படும் புது ஆலைகளைப் பற்றியும், அணைக்கட்டுகளைப் பற்றியும் கேள்விப்படும்போது நூறு கோடி, இருநூறு கோடி என்று தகவல் கிடைக்கிறது. இவ்வளவு கோடி ரூபாய்களைச் செலவழித்து, ஆலைகளையும் நீர்த்தேக்கங்களையும் அமைப்பது மட்டுமில்லாது, அவைகளுக்கு அருகிலேயே மாபெரும் நகரங்களையும் பலகோடி ரூபாய்களில் நிர்மாணிக்கிறார்கள். இதனால் பல புதிய நகரங்கள்! பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை!

இன்றைய யுகத்தில், ஒரு நாட்டின் வளத்தை, அங்கேயிருக்கிற ஆலைகளையும், கனிப்பொருள்களையும் கொண்டே மதிப்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட ஆலைகள் இங்கே உண்டா? இல்லை! சுரங்கப் பொருள்களோ, ஏராளம்! அவையோ தோண்டியெடுக்கப்படாமல், பூமிக்குள் கிடக்கின்றன!

ஐந்தாண்டுத் திட்டம் போட்டு ஆயிரக்கணக்கான கோடிகளை செலவழிக்கும், இப்போது கூட இவைகளுக்கு 'கதிமோட்சம்' ஏற்படவில்லையென்றால் பிறகு எப்போதுதான், தெற்கு வாழப் போகிறது?

பாங்கிகள், இன்ஷியூரன்ஸ், ஆலைகள், வியாபாரம் — ஆகிய இத்துறைகளிலெல்லாம் வடக்கு வகிக்கிறது ஆதிக்கம்! அதோடுகூட, இந்த வளங்களும் அதிகரித்தால்......!! தெற்கு, உலர்ந்த சருகாகி, மீளமுடியாத வறுமைக்கும் ஏழ்மைக்கும் ஆளாக வேண்டியதுதான்.

இந்த சமயம், அது விழிப்பு பெறுவிட்டால், பிறகு வளம் பெறுவதென்பது—சாமான்யமல்ல. நாளையதினம், வடவரிடமிருந்து நாம் விடுதலை பெறும்போது, எலும்புக் கூடான திராவிடம்தான் நமக்குக்கிடைக்கும்! வெள்ளையனாவது, வெளியேறும்போது வேண்டிய செல்வக் குளங்களை விட்டு விட்டுப் போனான். இந்தக் கொள்ளையர்கள் போகும்போது, விழியில்லாத குருடர்களாக்கிவிட்டுத்தான் போவார்கள் போலிருக்கிறது, திராவிடத்தை!!

இப்படி, திட்டம் போட்டு அவர்கள் செயலாற்றுகிறார்களோ என்றுகூட நமக்கு ஒரு அச்சம் அரும்புகிறது. ஏனெனில், அவ்வளவு ஓரவஞ்சனை, ஒருதலைப்பட்சம்—நல்ல உதாரணம், சேலத்தில் எஃகு ஆலை நிறுவ காங்கிரஸ்காரர்களே முயன்றும், அண்மையில், டில்லி மறுத்ததைக் குறிப்பிடலாம்.

இப்படி, தெற்கு அலட்சியம் செய்யப்படுவதைப்பற்றி, தமிழகத்தார் மட்டுமல்ல, கேரளத்தார், ஆந்திரத்தார், கன்னடியர் உள்பட பலரும், பல முறை பார்லிமெண்டிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்னினும், பலன் பூஜ்யம்தான்.

இந்த அட்டகாசத்துக்கு எப்போது முடிவு? இதைப்பற்றி கவனிக்காமலிருப்பது யாருக்கு ஆபத்து?—இதையெல்லாம் நன்கு உணர்ந்த காரணத்தால்தான், பேரூரில் நடைபெற்ற தி. மு. க. பொதுக் குழுவில், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத்தும், என். வி. நடராசனும் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

20-3-55 அன்று ஐந்தாண்டுக் கண்டன நாள் நடத்தி, நமது கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும், என்பது அத்தீர்மானம்.

இந்த நாள், நமது கழகத்துக்கு மட்டுமல்ல, நாட்டின் நலனில் அக்கறைகொண்ட ஒவ்வொருவரும் கலந்துகொள்ளவேண்டிய தினமாகும்.

கண்டனக் குரல் ஒலிக்கட்டும் நாடெங்கும் — அதற்கான வகையில், ஒவ்வொரு கிளைக்கழகத்தினரும் இப்போதுமுதலே முயற்சியெடுத்து. பட்டிதொட்டி எங்கும், டில்லியின் ஆதிக்க அட்டகாசம் ஒலிக்கும்படி செய்ய வேண்டும்.

மிகமிக முக்கியமான வேலை, இது' உடனடி வேலை.

வடவர் ஆதிக்கத்தின் போக்கை உணர்த்தும், வேலை.

ஒவ்வொரு கழகத் தோழர்களும் அதற்கான முயற்சியில் ஈடுபடக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒழிக, வடநாட்டு ஆதிக்கம்!
மலர்க, புதுமைத் தாயகம்!

★

கொள்கையே நமது கோட்டை!

"நண்பர், 'ஆம்லெட்' செய்ய வேண்டும் என்கிறார். உன்னிடம் இருக்கும் 'முட்டை'யைக் கொடு, 'ஆம்லெட்' செய்து சாப்பிடுவோம் என்கிறார். நிச்சயம், தருவேன்! அப்படித் தருவதால், கோழியையே அவரிடம் ஒப்படைத்துவிடுவேன் என்று அவர் எதிர்பார்த்தால், நிச்சயம் ஏமாந்து போவார். 'ஆம்லெட்'டுக்காக கோழியை, ஒரு அரசியல் தேர்தலுக்காக கொள்கையைக் கொடுத்துவிடக் கூடியதல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்"

*

கம்யூனிஸ்டுத் தோழர் ஏ. கே. கோபாலன், பார்லிமெண்டு எதிர்க்கட்சித் தலைவராக ஆகாத சமயம்.

சிறைவாழ்வு நீங்கிவந்த அவரை காஞ்சியில் வரவேற்று உபசரித்தனர், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுச் செயலாளர், தந்த விளக்கத்தைத்தான் மேலே குறிப்பிட்டுள்ளோம்.

இவ்வண்ணம் 'கொள்கை'யை கொடுக்கும் கூட்டத்தவர்களல்ல என்று அவர்கள் கண்டுகொண்டதால், ஏற்பட்ட விளைவுகளையும் முடிவுகளையும் நாடு அறியும்.

பொதுத் தேர்தலின்போது, 'திராவிடநாடு' கோரிக்கையை ஏற்றுக்கொண்டால், எங்களது முழு ஆதரவு உண்டு, என்று தி. மு. க. திட்டவட்டமாக அறிவித்தது.

தோழர்கள், மயங்கினர்! நாமும், நம் வேலையை, வழக்கம்போலச் செய்தோம்!

*

அரசியல் வாழ்க்கையில், கொள்கைக்காக குருதி சிந்தி, கொடுமைகளைத் தாங்கி, தனது சகோதரர்களின் பிணங்களைத் தத்தம் செய்து, அந்தக் கல்லறைகளின் மீது கண்ணீர் சிந்தியபடி, நாட்டில் நடைபோடுவது திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

வழிசெல்லும் திசையெல்லாம் சென்று நேரத்தையும் நினைப்பையும், வீணாக்கிக்கொள்ளும், அவகாசம் சிறிதுகூட இடையாது நமக்கு,

விடுதலைபுரி, நமது இலட்சியப் பாதை! அந்த இலட்சியத்துக்காக நாம் பட்டுவரும் கஷ்டங்கள், சாமான்யமல்ல. உலகத் திரையில் உருவான இலட்சியக் கோட்டைகள், எண்ணற்றவையுண்டு—அந்தக் கோட்டைகளில் பல, நமக்குப் பின் கட்டப்பட்டு, ஆனால் இன்று கொடிபறக்கின்ற வகையில் ஆட்சி அமைத்துவிட்டன. அதோ, தெரிகிறது, பாகிஸ்தான்!

ஆனால், திராவிட சமுதாயம் மட்டிலும்தான், ஆசை காட்டியவனுக்கெல்லாம் மோசம்போய், தனது இலட்சியத்தை இழந்து மாற்றானும் உற்றானும் கைகொட்டிச் சிரிக்கும் கதிகெட்ட நிலைக்கு ஆளாயிற்று.

காரணம், கொள்கை உறுதி கொண்ட காளைகள் ஒருபக்கம்! அரசியல் பீட ஆசைகொண்ட வேஷதாரிகள் இன்னொரு பக்கம். காளைகள் மனதில், வீரம்! வேஷதாரிகள் தலையில், பிறரை மயக்கும் ஜரிகைக் குல்லாய்! வெல்வது, வீரமா? பணமா?—எனும், பலத்த போராட்டம் ஏற்பட்டு, கடைசியில் கண்ணியமுள்ள காளைகளின் எண்ணம் வெற்றி பெற்றது — வீணாகி விடுமோவென, புதுமையாளர்களெல்லாம் ஏங்கிய, நீதிக்கட்சி, 'கழகம்' ஆயிற்று—'சேலம்' நடந்தது.

அந்நாள் முதல், திராவிட மறவர்களின் மனதில், 'கட்சி தமது வீடு' எனும் கருத்தும், இலட்சிய புரியை எப்படியும் அடைந்தே தீருவோம் என்கிற எண்ணமும், வலுப்பெற்றது—வளர்ந்தது.

இடையில் உண்டான, 'பேரிடி'யால், அதே இலட்சிய வெறி, தனிப் பாசறையாக ஆக நேர்ந்தது —ஒரே கொள்கைக்காகப் போராடும் இரண்டு முனைகள், ஆயின, 'திராவிடநாடு' இயக்கம்.

ஆலுக்கு விழுது—என்றனர், நல்லோர்.

"ஆகா! அப்படிச் சொல்ல நீ யார்?" என்றோரும் உண்டு.

விரலைவிட்டவர்கள், விழியை அகலமாக்கி நமது நடையைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், 'ஜாதகம்' கணித்தவர்கள், சேற்றிலும் சகதியாலும் சாய்த்துவிடலாம் என எண்ணி எடுத்தெறிந்தவர்கள், 'ஏது, பணம்?' என்று கேட்டவர்கள், துரோகிகள் என்றோர், சூதர்கள் என தொடைதட்டியோர், "பார்! பார்! காங்கிரசோடு கூடிக்கொண்டு மந்திரிப் பேரம் பேசுகின்றனர்" என்று கதறியோர், அதற்காகவே 'கம்யூனிஸ்டுகளுக்கு தேர்தலில் வேலை செய்யவில்லை' என்று கண்டனக் கணைகள் பூட்டியோர், ஏராளம்! ஏராளம்!!

மாற்றார்களல்ல! உற்றார்கள்தான்! — உறுத்தும் கண்ணைப் பெற்ற, உத்தமர்கள்.

அவர்கள் எல்லாம் கண்டு, அச்சமும் திகிலும் கொள்ளக்கூடிய வகையிலே, நாம் வளர்ந்திருக்கிறோம்—கண்டோர்க்கெல்லாம் கண்ணசைத்தா! அல்ல. தூற்றினார்களே, அவர்கள் சொல்லியதுபோல கொள்கையைவிட்டுக் கொடுத்தா! அல்ல, அல்ல.

பேரூர் பொதுக் குழுவில்

"பொதுவாக முற்போக்குக் கருத்துகள் பரவுவதைத் தடுத்துவிடவேண்டுமென்றும், குறிப்பாக திராவிட இயக்கம் பரப்பிச் செல்வாக்கு உண்டாக்கும் கருத்துக்களைத் தடுத்துவிடவேண்டும் என்றும் சென்னை சர்க்கார் நிறைவேற்றி இருக்கும் நாடகத் தடைச் சட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், இத்தகைய பிற்போக்கான சட்டத்தை ரத்து செய்யும்படி வலியுறுத்துகிறது............ சட்டத்தின் துணைகொண்டு, சர்க்கார் தி. மு. கழகத்தினர் நடத்தும் நாடகங்களைத் தடுக்க முன்வந்தால், சட்டப்படியும் கிளர்ச்சி மூலமாகவும் எதிர்ப்புமுறையிலும் நடவடிக்கை எடுக்க பொதுச்செயலாளருக்கு பொதுக்குழு அதிகாரம் அளிக்கிறது"

நெடுஞ்செழியன்
பொன்னம்பலனார்

கொள்கை, நமது இருதயம். அதனை, எப்போதும், எதற்காகவும் விட்டுக்கொடுத்ததில்லை—நாம்.

அதனால், மாற்றுக் கட்சியினர் நற்காரியத்துக்காக நமது, ஒத்துழைப்பைக் கேட்டபோது, தங்கு தடையில்லாமல் தந்து வந்துள்ளோம்.

ஒத்துழைப்பைத் தருவதென்பது, வேறு! கொள்கையைக் கொடுப்பதென்பது, வேறு!

இதைத்தான், தோழர் கோபாலனுக்கு, எடுத்துச்சொன்னர் பொதுச்செயலாளர்.

*

அதே உதாரணத்தை, பேரூரில் நடைபெற்ற பொதுக்குழு கூட்ட முடிவுகளை விளக்கி கோவை சிதம்பரம் பூங்காவில் பேசிய பொதுச் செயலாளர், மீண்டும் கவனமூட்டியிருக்கிருர்—வேறு வகையில்.

"புலிவேட்டைக்குச் செல்கிருன், ஒருவன்! இடையிலே புல்லாங்குழல் கீதம் கேட்கிறது!! ஆகா, எவ்வளவு மதுரமான இசை?—என்றெண்ணி, அதைக் கேட்டுக் கொண்டே, மயங்கி வந்தவேலையை மறந்து விடமாட்டான். இசை, இவ்வளவு நன்ருயிருக்கிறதே எனறு சிறிது நின்று, கேட்பான்! பிறகு, வழக்கம்போல, தன் வேலையைப் பார்க்கப் போய்க்கொண்டேயிருப்பான். அதைப்போலத்தான், "திராவிடத் தனியரசு" என்கிற லட்சியத்தைக் கொண்ட நாம், நாட்டிலே நிகழ்கிற சில அரசியல் நிகழ்ச்சிகளில் மனமயக்கம் கொண்டு, நமது இலட்சியத்தை மறந்து விடமாட்டோம்."

நாட்டிலே நிகழ்கிற, சில அரசியல் நிகழ்ச்சிகள்! — எவையெவை என்பதை, மக்கள் நன்ருக அறிவார்கள் —நமது கழகத்தோழர்களும் தெளிவாகத் தெரிந்துகொண்டிருப்பார்கள்.

அரசியல் அலைகள் பல அடிக்கடி எழும்புகின்றன—முன்பெல்லாம் ஆட்சிபீடத்தை அலங்கரிக்கும் கட்சியின் அலைகள், ஓங்காரக் கூச்சலோடு எழும்பிவந்து, கரையைச் சேதப்படுத்திவிட்டுகாவலர்களான நம்மையும் 'பதம்பார்த்து' விட்டுச் செல்லும். ஆனல், அன்பர் காமராஜர் வந்ததுமுதல், அந்த அலைகளின் வேகம் சிறிது ஓய்ந்திருக்கிறது—அதனல், அலைகளின் சுபாவம் மாறிவிட்டது என்பதல்ல பொருள். வேகம் குறைந்திருக்கிறது — அதோடு, கிளிஞ்சல்களையும், கடல் நுரைகளையும்கொண்டு வந்து தள்ளுகிறது. கிளிஞ்சல்கள், அழகு அழகாகக்கூட இருக்கின்றன! அதற்காக,சொந்த வேலைகளை மறந்து, அவைகளைப் பொறுக்கிப் பார்த்துப் பாராட்டிக்கொண்டே இருந்திடமாட்டார்கள் — மக்கள். குழந்தைகள்கூட, சிறிது நேரம் பார்த்து மகிழ்ந்துவிட்டு, பிறகு போய்விடும். கொள்கைக்காக வாழ்வோர், குழந்தைகளுமல்ல— கிளிஞ்சல்களைக் கண்டு, அதன் அழகிலேயே, லயித்துவிடுவோர்களுமல்ல.

காமராஜர், இங்கேயிருக்கிற நாட்டின் நாடியை நன்ருக உணர்ந்த காரணத்தால், வேகத்தைக் குறைத்தும், 'கடிவாளத்தை' இழுத்துப்பிடித்தும், நடைபோட்டுக்கொண்டிருக்கிருர். அவர்மட்டுமல்ல! அவர் அடிபணிந்திருக்கும் அகில இந்திய காங்கிரசும், அதே நிலையில்தான் இருக்கிறது, இன்று. தேர்தல் காலம் நெருங்க நெருங்க, அதற்கே, பயமும் அச்சமும் அதிகமாகி வருகிறது — அதன் விளைவாக, பல வாணவேடிக்கைகளைச் செய்யும் நிலைமைக்கு வந்திருக்கிறது. அவைகளில் ஒன்றுதான், "சோஷியலிச மாதிரியில்..." என்று ஆவடியில், நிறைவேற்றப்பட்டிருக்கும், தீர்மானம்.

எல்லா எதிர்க்கட்சிகளையும் அனுசரித்துக்கொண்டு, காலம் தள்ளவேண்டிய கட்டந்துக்கு காங்கிரஸ் கட்சி வந்திருக்கிறது.

எவ்வளவு பெரிய சரிவு இது! இந்தச் சரிவு,காங்கிரஸ் கோட்டைக்குள்ளே, எதிர்க்கட்சிகளைக்கண்டு ஏற்பட்டிருக்கும் **கலக்கத்தை** காட்டுகிறதே அல்லாமல், காங்கிரசுக்கு **நல்லபுத்தி** வந்துவிட்டது என்பதை அல்ல.

முதலாளிகளின் கைப்பொம்மையாகக் கிடக்கும் கட்சிக்கு, நல்லபுத்தி ஏற்படுவதென்பது எளிதல்ல. அப்படியே 'நல்லபுத்தி' ஏற்பட்டு, "முதலாளிகள் கூடாது—ஏழைகள் அரசை ஏற்படுத்துவோம்," என்று அந்த அகில இந்தியக் கட்சி முடிவு செய்தாலும், புதியதொரு தாயகத்தை ஏற்படுத்த விரும்பும், நமது நிலை என்ன?

"வருங்காலத்தில், காங்கிரஸ், இப்போதுள்ள சோஷியலிசம் மாதிரி என்பதை விடுத்து, உண்மையான சோஷியலிசத்தை ஏற்றுக்கொண்டு செயல்பட்டாலும்கூட, நாம் திராவிடநாடு கோரிக்கையை விட்டு விடுவோமா என்ருல், நிச்சயம் விடமாட்டோம்."

எப்படி விடமுடியும்? இதைத்தான், கோபாலன் வரவேற்பில், குறிப்பிட்டார், பொதுச்செயலாளர்! இந்தக் காங்கிரசைவிட, கொள்கை ரீதியில், முற்போக்கானது கம்யூனிஸ்டுக் கட்சி- அதற்கும் நமக்குமே, இலட்சியப்பாதையில், வேற்றுமையிருக்கிறபோது, எப்படி விட்டுவிட முடியும்? திராவிடநாடு, திராவிடருக்கே!-இந்த உரிமை முழக்கத்தை, அரசியலில் ஏற்படும் ஒருவித மயக்கத்துக்காக, எப்படி இழந்துவிட இயலும்?

இதைப்பற்றி நமது தோழர் சம்பத், ஒரு அழகான கதை பொன்று சொல்வார், "ஒருத்திக்குப் பட்டுச்சேலை கட்டிக்கொண்டு கலியாண வீட்டுக்குப் போக வேண்டுமென்று ஆசையாம். அவள் நிலையோ, அதற்குத்தக்கது அல்ல! ஆசையோ, குடைகிறது!! என்ன செய்வாள்? முகத்தைக் கண்ணுடியில் பார்த்துக்கொண்டாள்—மலர் சூடினுள், முகத்தை அலம்பினுள்—வீதிக்கு வந்து நின்ருள்—விழியை இப்படியும் அப்படியும் அசைத்தாள்—பலர், திரும்பிப் பார்த்தனர்! கதவு, திறந்து; திறந்து மூடப்பட்டது—கையிலே, பணமும் சேர்ந்தது. பகட்டாக சேலையைக் கட்டிக்கொண்டு போனுள், கலியாண வீட்டுக்கு. அங்கிருப்போ

பேரூர் பொதுக்குழுவில்

அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 'சோஷியலிசம் மாதிரி' ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்குவது என்ற தீர்மானமானது, ஏழை—நடுத்தர மக்களிடையே உருவாகி வளர்ந்து வரும் முற்போக்கு சக்தியினை சிதைவுறச்செய்ய நடத்தப்படும் ஓர் கண்துடைப்பும், ஏமாற்றுத்தனமும் ஆகும் என்பதை பொதுக்குழு, மக்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

—மதியழகன்,

—இளங்கோ.

ருக்கு, இவள் எப்படி இந்தச் சேலையைப் பெற்ருள் என்கிற 'கதை' தெரியும்! அவளைப்பார்த்து, சிரித்தனர்—கூடிக்கூடிப் பேசினரே யொழிய, ஒருவராவது, மதிக்க வில்லை. புடவைக்காக, பொதுமகள் ஆனவளை, எப்படி மதிப்பார்கள், மக்கள்?"

ஒருபோதும், மதியார்! அதைப் போலத்தான், ஏதோ ஒரு மயக்கத் துக்காக தமது நிலையை, இழப்போர் நிலையும்!

இந்தக் கதையை சம்பத்து சொல்வது, நாடாளும் காங்கிரஸ், மக்கள் மன்றத்தின்முன் நடமாட, பிறரை நாடி, பெறும் 'சேலை'யைப் பற்றித்தான்! அந்த அகில இந்தியக் கட்சி, தனது அடிப்படையை மறந்து, மக்கள்முன் 'கவுரவமாக' நடைபோட வேண்டுமே என்பதற்காக, இப்படியெல்லாம் நடந்து கொள்ளும் காட்சிகள்-இங்கே,மட்டுமல்ல — இந்தியா முழுமையும் உண்டு.

அந்தக் கட்டத்துக்கு,வருகிறது, அது.

அதனால், மயங்கிடவா முடியும், "தாயக விடுதலையே எமது கடன்," எனப் பணியாற்றுவோர். ஒருக்காலும், முடியாது! தற்காலிகமாகக் கிடைக்கும், 'ஆம்லெட்'டுக்காக கோழியையே கொடுத்துவிட முடியாது!

அதுவும், குருதிகொட்டி கண்ணீர்விட்டு வளர்த்த கொள்கையை, மறந்துவிட முடியாது.

இதனை, எல்லோரும், மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

காமராஜர், தனது ஆட்சித் தேரை எப்படியாவது ஓட்டிக் கொண்டுபோகவேண்டுமெனும் ஆசையில், பலரையும் திருப்திப் படுத்த எதெதையோ செய்கிருர்— அந்த செயல்களில், பல, பலரைத் திருப்திப்படுத்துவதுபோலக்கூடக் காட்சிதரும்.

ஆனால் உண்மை என்ன? வடநாட்டுச் சின்னமான, 'டால்மியாபுரத்தின்' பெயரை மாற்றவேண்டுமென, நாம் சிந்திய இரத்தம்— ஏராளம்—தத்தம் செய்தோம் இருவரை. ஏற்றுக்கொள்வதுபோல, இதே அரசினர் கூட, அறிக்கைகளை வெளிவரச் செய்தனர்—ஏடுகளில்.

இப்போது ஒரு செய்தி கூறுகிறது. "பெயர் மாற்றம் தேவையில்லையென்று. சென்னை சர்க்கார் அதிகாரிகளே, ரயில்வே போர்டுக்குச் சொல்லிவிட்டார்களாம்"

எப்படிச் சம்மதிப்பார்கள், அவர்கள்? நம்முடைய பாதை வேறு! அவர்களுடைய பாதை வேறு!

•

கனவான்களின் கூடமாகயிருந்த நமது கழகம், இன்று வீரக்காளை

20—2—55 அன்று பேரூரில் தோழர்கள் சே.அ.இராசமாணிக்கம், செயலாளர் பழனிச்சாமி, சி.டி. தண்டபாணி, அரசு, கிருஷ்ணமூர்த்தி, சி. எஸ். ஆர். மாணிக்கம், வணங்காமுடி, சேரலாதன், புகழேந்தி, அப்பாவு, ஜானகிராம், மற்றும் கழக செயற்குழு உறுப்பினர்கள் ஒத்துழைப்பால், பொதுக்குழு மிகவும் வெற்றிகரமாக நடந்தேறியிருக்கிறது.

இந்தப் பொதுக்குழுவின் கடைசிக் கூட்டம் என்று இதைச் சொல்லாம்.

ஏனெனில், ஜூன் திங்களுக்குள், புதிய பொதுக்குழு அமைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொழுதுள்ள கழக உறுப்பினர்களைக்கொண்டு, புதிய பொதுக்குழு, அதற்குள் அமைக்கப்படவேண்டும். அந்தப் பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் பொதுச்செயலாளரே, திருச்சி மாநில மாநாட்டில் தலைமை வகிப்பார்.

எனவே, 'விடைபெற்றுக் கொண்டு' செல்லும் இந்தப் பொதுக்குழுவினரின் சாதனைகளைப் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும் நாம்.

இப்படி, எண்ணிப்பார்த்துகளிப்படையும், 'பாக்யம்' பெற, பல பாடுபட்டவர்கள்—நாம். இரத்தமும், கண்ணீரும், சிந்தியவர்கள் — உயிர்களையும் இழந்திருக்கிரோம்.

இத்தனையையும், 'உறுமுவோரின்' கண்களுக்கு எதிரிலேயே செய்துகாட்டியிருக்கிரோம். கண்ணீரோடு வெளிவந்தவர்கள்! உழப்பையும், 'அது தந்ததையும்' விட்டுவிட்டு வந்தவர்கள்!! ஆயினும், நாட்டுக்கும், கழகத்துக்கும், பல பணிகளைச் செய்திருக்கிரோம் — கொள்கைக்காக மடிந்த வீரர்தம் குடும்பத்தின் கண்ணீரையும் துடைத்திருக்கிரோம.

சாமான்யர்கள், நாம்! 'பெற்றவர்கள்' வைத்துப்போன, 'பாங்கிக் கணக்கு' நம்மிடம் கிடையாது! ஆயினும், இத்தனை, நற்பணிகளையும்,போராட்டங்களையும் நடத்தியிருக்கிரோம்.

இது, நமது கொள்கைக்கும், எதிர்காலத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

நினைத்த மாத்திரத்தில் 'லட்சங்களை'ச் சேர்க்கும் கட்சிகள் கூட, கவனம் செலுத்தாத விஷயம், தஞ்சைப் புயல் நிவாரண நிதி. திரட்டித் தந்தோம், ரூபாய் 30,000 அளவில்!

தறியாளர் துணி தூக்கி, நாடெல்லாம் அலைந்தோம். அதன் பலனுக, இன்று, கைத்தறி துணிகளுக்கு நாட்டில் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

இவைகளைச் செய்த நாம்,நமது கழகத்துக்கான சில நல்ல ஏற்பாடுகளையும், செய்யத் தவறவில்லை — முக்கியமான ஒன்று, முன்பு வாங்கிய கட்டிடம், கழக உடைமை ஆகியவைகளை ஒரு சொத்துப் பாதுகாப்பு குழுவின் வசம் ஒப்படைத்தது.

சிறப்பான காரியம், 'நம் நாடு' ஏடு—கழகச் சார்பில்—நடைபெறச் செய்தது.

இந்தப் பணிகளின் பட்டியல் பெரிது; ஆயினும், சிலவற்றைக் குறிப்பாகத் தருகிரோம் — கொள்கை வீரர்கள், கூறி மகிழ:-

புயல் நிவாரண நிதி

கைத்தறித் துணி விற்பனை

தி. மு. க. சொத்துப் பாதுகாப்பு

'நம் நாடு', ஏடு

சித்தூர் போர் ஆதரவு

கல்வித் திட்ட ஒழிப்புப் போர்

கல்லக்குடி அறப்போர்

'நான்சென்ஸ்' கண்டனப் போர்

கழக வீரன் 'மஜீத்' குடும்பத்துக்கு நில உதவி.

தூத்துக்குடி, லால்குடி வழக்குகளை நடத்த ரூ. 20,000 நிதி திரட்டியது

களின் வியர்வைக் கோட்டையாக மாறி வந்துவிட்டது. இனி, எத்தகைய புயல் மோதினாலும், எரிமலைகள் வெடித்தாலும், நாம் தாங்கியிருக்கும் கொள்கைகளை, அழிக்க யாராலும் முடியாது.

கொள்கைகள், ஒவ்வொருவர், மனக்கோட்டைக்குள்ளும் இடம் பெற்றுவிட்டன.

இதனை, சாதிப்பது, இலேசான காரியமல்ல—இந்திய உபக்கண்டத்திலே இருக்கும், அரசியல் கட்சிகள் பல, மக்கள் மன்றத்துக்குள் நுழையவே இயலாது இருக்கின்றன.

மக்கள் மன்றத்தில் ஆனந்தப் பவனி போட்ட கட்சிகளே, அங்கு செல்ல, இப்போது, துணை தேடுகின்றன, துணை!!

ஆனால், நாமோ, ஆனந்தமாகப் பவனிவருகிறோம்— எங்கெங்கு ஏழைகளும் இல்லாதவர்களும் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் இருக்கிறோம், நாம்.

அப்படி உருவாகியிருக்கிற உணர்ச்சி வெள்ளத்தையும், இஷ்டம்போல், ஓடவிட்டுவிடவில்லை. மூன்றாண்டுகளுக்குமுன், ஒழுங்கான முறையில், உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழுவின் மூலம், பணிபுரிந்து வருகிறோம்.

கட்டுப்பாடு! கண்ணியம்!! — இவைகளே, நமது கழகத்தின், முதல்.

அதனால் பெற்ற பரிசுகள்தான், தலைமைக் கழகம்—அறிவகம்.

கழகத்துக்கோர், ஏடு, நம் நாடு.

அதுமட்டுமின்றி, நமது உரிமை முழக்கும் அரசியல் போராட்டங்களை நடத்தியும் வெற்றிகண்டிருக்கிறோம்.

இவைகள், சாதாரணமானவைகள் அல்ல; எதிர்காலவிடுதலை வரலாற்றில், இடம்பெறப்போகும் பொன் குறிப்புகள்!

இப்படி வெற்றிநடைபோடும், நாம்—மேன்மேலும், நமது கழகத்தைக் கோட்டையாக்க வேண்டும்.

திராவிடநாடு, திராவிடருக்கே!— இதுவே, நமது இலட்சியகீதம். இதனை ஏற்போர், அனைவரும் நமது தோழர்கள். அவர்களே, நமக்கு உறுதுணை.

இதனால், ஏற்காதோர் எல்லாம் விரோதிகள் என்று வீராவேசப் பரணி பாடவும் தேவையில்லை.

இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் நமது இடம் நோக்கிவரப்போகிறவர்கள், அவர்கள்.

அதனால், அவர்கள் செய்யும் நன்மைகளைப் பாராட்டுவோம் — நம்மை நாடி, வந்தால், உதவி அளிப்போம்.

இதனால், நமது 'கோழி'யைக் களவாட, அவர்கள் முயன்றால், கழுத்தைத் திருகிக்கொல்ல முயன்றால் — தடுக்கும் நம் தடந்தோள்! ஒடிக்கும் அவர்தம் கெடுமதியை!

கொள்கையே, நம்,கோட்டை! அந்தக்கோட்டைகள் சுண்ணாம்பாலும், கல்லாலும் கட்டப்படவில்லை—ஒவ்வொரு தொண்டர்களின், உள்ளத்திலும், இருக்கிறது.

அத்தகைய தொண்டர்களே— நமக்குத் துணைவர்கள்.

அவர்கள் வாழ்க! வளர்க!!

★

மாநில மாநாட்டுக்கான நிதி திரட்ட தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, அ. பொன்னம்பலனார் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. மேலும் ஆறுபேர், இக் கமிட்டியில் சேர்க்கப்படலாம்.

சட்ட திட்டத் திருத்தம் பற்றிய தீர்மானம்

—★—

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்டங்களில் கீழ்க்கண்ட திருத்தங்களையும், சேர்ப்புகளையும் ஏற்று, பொதுக்குழு திருத்துகிறது:—

திருத்தம் (1):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், 23-வது விதிக்கடுத்து 'நகரக்குழு' என்ற தலைப்பை 'நகரக்கிளை' என்று திருத்தவும்.

திருத்தம் (2):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், 24-வது விதியில், 'நகரக்குழு' என்றிருப்பதை 'நகரக்கிளை' என்று திருத்தவும்.

திருத்தம் (3):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், இப்பொழுதுள்ள 25-வது விதியை நீக்கி, கீழ்க்காணும் விதியைச் சேர்த்துக்கொள்ளவும்:—

"25-க்குக் குறையாத உறுப்பினர்களைக்கொண்ட ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக்கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக்கொண்டு இயங்கலாம்.

(அ) வட்டாரக் கிளை ஒவ்வொன்றும் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் உட்பட ஏழு பேர்களைக் கொண்ட ஒரு வட்டாரக் குழுவை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) வட்டாரக் குழுவுக்கும், நகரக் குழுவுக்கும் இடையே உள்ள தொடர்பு, நகரக் குழுவின் நடவடிக்கைகளுக்கு, நகரக் குழுவின் மேற்பார்வையில், கட்டுப்பாட்டின்கீழ் துணைபுரியும் அளவே உண்டு."

திருத்தம் (4)

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், இப்பொழுதுள்ள 26-வது விதியை நீக்கிக் கீழ்க்காணும் விதியைச் சேர்த்துக்கொள்ளவும்:—

"ஒவ்வொரு நகரக் கிளையும் (பொது உறுப்பினர்கள் அனைவரும் அடங்கியது) 2 ஆண்டுக்கு ஒரு முறை, பொதுச் செயலாளர் குறிப்பிடும் நாளில்—செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், செயற்குழுவினர் — ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

—ஈ. வெ. கி. சம்பத்

—கே. ஏ. மதியழகன்

★

பேரூர் பொதுக் குழுவில்

தொழிற் சங்கங்களில் நேரடியாக தி. மு. கழகத் தோழர்கள் ஈடுபட்டு நடத்துவதென்ற அரக்கோணம் பொதுக் குழுவின் தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள், தொழிலாளர் பகுதிகளில் பணிபுரிந்து தொழிலாளர்களை ஒன்று திரட்டும்படிக்கும்' தொழிற்சங்க அமைப்புக்கான சூழ்நிலை ஏற்படுவதை அவ்வப்போது தி. மு. கழகத் தலைமை நிலையத்துக்கு அறிவிக்கும்படியும் பொதுக் குழு கேட்டுக்கொள்ளுகிறது.

சே. அ. ராசமாணிக்கம்

ஜி. பராங்குசம்

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

ஹாப்ஸ் (*1588-1679*)

இவ்வாறு அரசியற் கருத்துக்கள் ஐரோப்பாவில் உருவாகிக் கொண்டிருக்கும்போது இங்கிலாந்தில் ஹாப்ஸ் என்ற அறிஞர் தோன்றினார். அவருடைய காலத்தில் நாட்டின் நிலைமையைக் கண்டு அந்நிலைமை வரக் காரணம் என்ன, அதற்குப் பரிகாரம் என்ன என்ற ஆராய்ச்சியில் இறங்கினார்.

ட்யூடர் மன்னர்கள் இங்கிலாந்தில், ஆண்ட காலத்தில், அவர்கள் பலமிக்கவர்களாக விளங்கினார்கள். பலகாலமாக நாட்டில் அமைதியின்றி பிரபுக்களுக்குள்ளே அடிக்கடி சச்சரவும், அதனால் மன்னருக்குப் பலவித தொல்லைகளும் ஏற்பட்டு கலகமாயிருந்தது. ட்யூடர்கள் சிம்மாசனமேறியதும் அவர்கள் பிரபுக்களை அடக்கிக்கட்டுப்படுத்தி மக்கள் மிகவும் விரும்பிய அமைதியை நிலைநாட்டினார்கள். அதனால் அவர்களின் ஆட்சி மக்களின் ஆதரவை நிறையப் பெற்றிருந்தது. மன்னனை தேசிய உணர்ச்சியே உருவெடுத்து வந்தவர் என்றும் தேச நலனைப் பாதுகாக்க வந்த இரட்சகர் என்றும் மக்கள் கருதினார்கள். எட்டாவது ஹென்றி என்ற ட்யூடர் மன்னன், தான் திருமணம் செய்திருந்த பட்டத்தரசி காத்தரீனைத் தள்ளிவைத்துவிட்டு அவளுடைய தாதிப் பெண்ணாகிய ஆன் பொலீனை மணப்பதற்கு போப் விதிவிலக்கு அளிக்கவில்லையென்ற காரணத்துக்காக போப்பையே எதிர்த்து கத்தோலிக்க திருச்சபையிலிருந்து இங்கிலாந்தை துண்டித்து, தன்னுடைய நாட்டுக்கு மன்னனாகி தானே மதத் தலைவனுங்கூட என்று பிரகடனம் செய்துகொண்டான். அவனே ஒரு காலத்தில் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகி போப்பை எதிர்த்த லூர்த்தரைக் கண்டித்து ஒரு நூல் வெளியிட்டு, அதற்காகப் போப்பிடமிருந்து "மதக் காப்பாளன்" என்று பட்டம் பெற்று அதைப் பெரியதொரு கீர்த்தியாக நினைத்து சூடிக்கொண்டவன், அப்படியிருந்துங்கூட தன்னிச்சைப்படி தன்னை போப் நடக்கவிடவில்லை என்பதற்காக இவ்வளவு பெரிய மாற்றத்தை அவன் செய்த போதும், மக்கள் அவனை ஆதரித்தார்கள். அவ்வளவு அன்பு இருந்தது மன்னன்மேல் மக்களுக்கு.

கடைசி ட்யூடரான எலிசபெத் ராணி ஆண்டபொழுது இங்கிலாந்து எழிலுடன் விளங்கியது. கலை, காவியம், போன்ற துறைகளிலும், வர்த்தகத் துறையிலும், என்றுமில்லாத அபிவிருத்தி ஏற்பட்டது. வெளிநாட்டு விவகாரங்களில் எதிர்பாராத வெற்றிகண்டு, அதுவரையில் படைபலமிகுந்ததாகக் கருதப்பட்ட ஸ்பெயின் நாட்டுடன் போர்புரிந்து, தோல்வியே காணாத ஸ்பெயினின் கப்பற் படையையே தோற்கடித்து வாகை சூடி வெற்றிக்கொடிநாட்டி அழியாக் கீர்த்தி பெற்றதும் எலிசபெத் காலத்தில்தான். மக்கள் தங்கள் ராணியை வாழ்த்தினார்கள். உள் ளன்புடன் நேசித்தார்கள். அவளிடம் எத்தனையோ குறைகளிருந்தாலும் அவைகளைக் கண்டும் காணாதவாறு அவளைப்போற்றிப் பெருமைப்படுத்தி வந்தார்கள். மக்கள் பிரதிநிதி சபையாகிய பார்லிமெண்ட் அவள் ஆணையிடுவதை நிறைவேற்றிவைக்கக் காத்திருந்தது.

தெய்வீக உரிமை

எலிசபெத்துக்குப்பின் வாரிசில்லாததால் ஸ்காட்லாந்து தேசத்தரசனாகிய முதலாவது ஜேம்ஸ் ஸ்டூவர்ட் என்பவனே இங்கிலாந்துக்கும் அரசனானான். இப்புதிய பரம்பரையினர் பார்லிமெண்டை கலக்காமலும் மக்களின் சம்மதம் பெறாமலும் ஆளவும், மக்களுடைய விருப்பத்தை மதிக்காமலும் நடக்கத் தலைப்பட்டனர். 'மன்னர்களின் தெய்வீக உரிமை'யால் இவ்விதம் செய்ய தனக்கு உரிமை இருப்பதாக ஜேம்ஸ் நினைத்தான்.

ட்யூடர் மன்னர்கள் செய்யாததை ஸ்டூவர்ட் மன்னர்கள், செய்துவிடவில்லை. ட்யூடர்களுடைய 'வரம்பில்லாத வல்லரசைத்தான் தொடர்ந்து நடத்தினார்கள். அம்மாதிரி செய்வதற்கு நல்லதொரு வியாக்கியானமும் தந்தான். முதலாவது ஜேம்ஸ், தெய்வீக உரிமைக் கொள்கையை வலியுறுத்தி, தான் கடவுளின் பிரதிநிதி என்றும், தான் கடவுளுக்கும் மனசாட்சிக்குமே கட்டுபட்டவனென்றும், மக்களுக்கும் நீதிக்கும் மேற்பட்டவன் என்றும் மக்களுக்குக் கடமைகள் உண்டேயல்லாமல் உரிமைகள் கிடையாதென்றும் கூறினான்.

உள்நாட்டுப் போரினால் அவதிப்பட்டு அமைதியைப் பெரிதும் விரும்பினார்கள் மக்கள். அதைத் தேடிக் கொடுத்தார்கள் ட்யூடர் மன்னர்கள். மக்கள் ஆதரவைப் பெற்றார்கள். எதை வேண்டுமானாலும் செய்தார்கள். நல்லது செய்தால் வாழ்த்தவும், பிடிக்காததை செய்தால் மக்கள் மன்னிக்கவும் தயாராயிருந்தார்கள். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அமைதி குலையாமலிருந்தது. வர்த்தகம் பெருகியது. செல்வம் சேர்ந்தது. வெற்றி மேல் வெற்றி கிட்டியது. நாட்டு மக்கள் செழிப்புற்றுப் புத்துணர்ச்சியும் தன்னம்பிக்கையும் பெற்றார்கள்.

நாட்டில் அமைதியே வேண்டும், ஆட்சியில் பங்கும் வேண்டாம் பொறுப்பில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று ட்யூடர்கள் ஆண்ட காலத்தில் நினைத்த மக்கள் ஸ்டூவர்ட் மன்னன் பட்டத்துக்கு வந்ததும் இப்போதாகிலும் தங்களுடைய பங்கை ஆட்சியில் பெறலாம் என்று நினைத்ததில் தவறில்லை. அந்த நேரத்தில்தான் தெய்வீக உரிமைக் கொள்கையைக் காட்டி ஜேம்ஸ் எதேச்சாதிகாரமாக நடக்

தமிழில் தந்தி

—[:]—

தமிழில் முதன் முறையாகத் தந்திச் செய்தி அனுப்பும் முறை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. கறம்பக்குடி போஸ்ட் மாஸ்டர் அ. சிவலிங்கம் அவர்கள் தமிழ்த் தந்தி முறையைக் கண்டுபிடித்துள்ளார். ஆங்கிலத் தந்தி முறையைப்போலவே, தமிழிலும் செய்திகளை விரைவாக அனுப்பவும் வாங்கவும் இயலும் என அவர் கூறுகிறார்.

கத் தலைப்பட்டான், மக்களுடைய வெறுப்புக்காளானான்.

ட்யூடர்கள் எதேச்சாதிகாரமாக நடந்தாலும் அவர்கள் நடத்தையில் ஒருவித கவர்ச்சியைக் கண்டார்கள் மக்கள். ஆனால் ஸ்டுவர்ட் மன்னர்கள் மக்களைத் துச்சமாக எண்ணி நடந்தனர். மேலும் ட்யூடர்கள் எதைச் செய்தாலும் தாங்கிக் கொள்ளும் மனப்பான்மை ஏன் ஸ்டுவர்ட்களின் ஆட்சியில் மக்களுக்கு இல்லையென்றால், ஸ்டுவர்ட்டுகள் இங்கிலாந்திற் பிறந்தவர்களல்ல. வெளிநாடாகிய ஸ்காட்லாந்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் சிறிய தவறு செய்தாலும் அதைப் பெரிதாகக் கண்டார்கள். சர்வாதிகாரமாக நடக்கத் தலைப்பட்டதைக்க்ண்டு மக்களிடையே எதிர்ப்புக் கிளம்பியது.

வெற்றி

இந்த எதிர்ப்பு வளர்ந்து இரண்டாவது ஸ்டுவர்ட் மன்னன் சார்லஸ் காலத்தில் கட்டுக்கடங்காமல் போய் முடிவில் மன்னனுக்கும் மக்களுக்குமிடையே பெரும் போர் மூண்டது. படைபலமிருந்தும், வெளிநாட்டு வேந்தர்களின் ஆதரவு இருந்தும், மக்களுடைய ஆவேசத்துக்கு முன் மன்னன் மண்டியிடும்படி நேர்ந்தது, மக்கள் மன்றத்திலே நிறுத்தப்பட்டான் சார்லஸ். அப்பொழுதுங்கூட தம்மை விசாரிக்கும் உரிமை மக்களுக்கில்லை, அரசரெவரும் தம் குடிகளாலேயே விசாரிக்கப்படுவது பொருந்தாது, நாட்டின் நீதி முறைகள் இவ்வாறு நிலைகுலைக்கப்பட்டால், நாட்டின் நல்வாழ்க்கைக்கான நீதி, ஆட்சி முறை, உரிமைகள், எல்லாம் அழிந்துவிடும் என்று சார்லஸ் எடுத்துச்சொன்னான். மன்னனுக்கு விசாரணையின் முடிவில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவனுடைய அரண்மனைக்கெதிரிலேயே அமைக்கப்பட்ட மேடையில் சார்லஸின் தலை வாங்கப்பட்டது.

மன்னனுக்கும் மக்களுக்கும் போர் மூண்டவுடன் நிலையான அரசாங்கம் இல்லாமல் அராஜகம் நிலவியது. அதைக்கண்ட ஹாப்ஸ் புதிய ஆராய்ச்சியில் இறங்கினார். கட்டுப்பாடு இல்லாத நேரத்தில் மக்கள் எப்படி கண்ணியமற்ற முறையில்நடந்துகொள்ளுகிறார்கள் என்று கண்கூடாகப் பார்த்த ஹாப்ஸ், அரசாங்கம் என்று ஏற்படுவதற்கு முன், அரசு என்ற ஒரு அமைப்பு உண்டாவதற்குமுன் மனிதர் எவ்விதம் நடந்திருப்பார்கள் என்று ஆராய்ந்தார். அதன் பயனாக அவர் கண்ட உண்மை என்னவென்றால் மனிதன் இயற்கையாகவே சுயநலமி என்பதுதான். தன் சொந்தக் காரியங்களைக் கவனிப்பதிலேயே அவன் கண்ணுங் கருத்துமாயிருக்கிறான். அவன் செய்யும் ஒவ்வொரு காரியமும் தன்னுடைய தேவைகளையும், இச்சைகளையும் பூர்த்திசெய்து கொள்ளும் கருத்துடன் அல்லது பிறர் தன்னை மதிக்கவேண்டுமென்ற எண்ணத்தால், அல்லது அதனால் தனக்கு ஏற்படும் இன்பத்தைக் கருதி செய்யப்படுவதாகவே இருக்கும். சுபாவமாகவே மனிதன் தன் சொந்த விவகாரங்களையே முதன்மையாகக் கவனிப்பானேயன்றி பிறருடைய நன்மையைக் கருதுவதேயில்லை.

அரசு, அரசாங்கம், சட்டம் என்றவையெல்லாம் தோன்றுவதற்கு முன் மக்கள் இயற்கையான ஒரு நிலையில் வாழ்ந்திருக்கவேண்டும். அதில் எல்லோரும் சுயநலத்தையே நாடி, பிறரை ஏய்த்துப் பிழைப்பதே, மற்றவரை ஏமாற்றிச் சுரண்டி வாழ்வதே வழக்கமாயிருந்திருக்கும், அதனால் துன்பமும் துயரமுமே குடிகொண்டிருந்திருக்கும். ஒவ்வொருவனும் மற்ற எல்லோருடனும் சச்சரவு செய்துகொண்டு சதா போரிட்டுக்கொண்டு, பிறருக்கு அஞ்சி அஞ்சி வாழ்ந்துகொண்டு, தனித்து, தரித்திரனாய், அருவருப்புக்குரியவனாய், மிருகம்போல, அற்பாயுள் படைத்தவனாய் வாழ்ந்து வந்திருக்க வேண்டும்.

இம்மாதிரியான பயங்கரமான இயற்கை நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் நோக்கத்துடன், மற்ற மனிதர்களுடன் சேர்ந்து பொதுவான ஓர் அமைப்பை ஏற்படுத்தி, எல்லோருமாக ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவனுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிவதாக எல்லோரும் ஒப்பந்தம் செய்துகொடுக்கிறார்கள்.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயே இயற்கை நிலை நீங்குகிறது. நாகரீக வாழ்க்கை—சமுதாய, அரசியல் வாழ்க்கை அதிலிருந்துதான் ஆரம்பமாகிறது.

இயற்கை நிலையில் மனிதன் முழு சுதந்தரத்துடன் வாழ்கிறான். ஆனால் சட்டம், நீதி, சொத்துரிமை எதுவும் அங்கு இருக்கமுடியாது. வல்லவன் வகுத்ததே சட்டமாயிருக்கும். அச்சம் நிறைந்த வாழ்க்கை அது.

அந்த வாழ்க்கையைவிட்டு அவர்கள் புதிய அரசியல் வாழ்க்கையை

தேனீக்களின் பாடம்!

உழைத்து ஏமாறும் பாட்டாளிகளுக்கு, தேனீக்களை, உதாரணம் சொல்லுவார்கள்.

அந்தத் தேனீக்கள், அண்மையில், தானோஜ் எனுமிடத்தில், சரியான பாடம் போதித்திருக்கின்றன.

குதூகலம்! கேலி! ஆனந்தம்!— கரைபுரள, கலியாணக் குழுவினர், ஒரு மரத்தடியில் போய் அமர்ந்தனராம். புது மண மக்கள்! அவர்தம் நண்பர்கள்!! ஆகவே, ஒரே ஆனந்த அட்டகாசம், அங்கே.

கொண்டுவந்த சிற்றுண்டிகளையெல்லாம் உண்பதற்காக, நெருப்பு மூட்டியிருக்கின்றனர். ஆனந்த அவசரத்தில், மரக்கிளையில், தேனீக்களிருப்பது எப்படித் தெரியமுடியும்?

புகை தாங்காது, புறப்பட்டன தேனீக்கள்! புதுமணக் குழுவினர் மீது, படையெடுத்தன, எல்லோரும், எடுத்தனராம், ஓட்டம். கூட்டத்தோடு சென்று மொய்க்கும், தேனீக்களின் கடியை, எப்படிச் சமாளிக்க முடியும்! எனவே, தப்பினோம் பிழைத்தோம் என்று, திசை கண்டபக்கம்; சிதறினராம்—'வன போஜனம்' அருந்த வந்தோர்.

மலர் நாடி, தேன் தேடி, பிறகு மனிதனுக்குக் கொடுத்துவிட்டு ஏங்கும் தேனீக்கள், துரத்தியடிக்கின்றன, மனிதக் கூட்டத்தை!

அந்தத் 'தேனீக்கள்' போல, தசையும் இரத்தமும் சுண்ட உழைத்து, பிறகு ஏங்கும் பாட்டாளிகளின் படை வரிசையும், அவைகளைப்போல் ஒன்று சேர்ந்து, கிளம்பினால்! ஓட்டம் எடுக்காமலா இருக்கமுடியும், உயரப்பர்களால்?

தேனீக்கள் சொல்லித்தருகின்றன, பாடம்! அதனை உணர்ந்து செயல்புரிவோர், கிளம்பினால்...!!— வெற்றிவிரையும். எங்கே, தென்படுகிறது, அந்த அறிகுறி?

மேற்கொள்ளும் போது தங்களுக்கு இயற்கை நிலையில் இருந்த சுதந்தர உரிமைகளை மனப்பூர்வமாக விட்டுக் கொடுக்கிறார்கள்.

தங்கள் சுதந்தரத்தையே கட்டுப் படுத்திக் கொள்ளச் சம்மதிக்கிறார் கள். முழுசுதந்தரத்துடன் இயற்கை நிலையில் பயந்து பயந்து வாழ்வதை விட, சில கட்டுப்பாடுகளுக்கடியில், ஒருதலைவனுடைய பாதுகாப்பில் அரசியல் சமுதாயத்தில் வாழ்வது சிறந்தது என்றுதான் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். சுதந்தரத் தையும் உரிமைகளையும் திரும்பவும் எப்பொழுதாவது வலியுறுத்தினால் அதன் விளைவு இயற்கை நிலையைத் திரும்பி அடைவதுதான். சுயநலக் காரனான மனிதன் தன் சொந்த பாதுகாப்புக்காகவே அரசியல சமு தாய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டபிறகு திரும்பவும் இயற்கை நிலைக்குச் செல்ல அவன் விரும்ப மாட்டான். அதனால் எவ்வளவு கட்டுப்பாடுகளைம் சகித்துக் கொண்டு ஒப்பந்தத்தின்படியே நடந்து கொள்ளுவான்.

முதலாவது

ஹாப்ஸின் கொள்கையின்படி மக்களுக்கும் மன்னனுக்கும் அவர் ஏற்படுவதாகச் சொல்லும் ஒப்பந் தம் விசித்திரமானது. முதலில் மக் கள் ஒன்றாகக்கூடித் தங்களுடைய பாதுகாப்புக்காக ஒருபுதியஏற்பாடு தேவை என்ற முடிவுக்கும் அதற் காக இயற்கைநிலையை விட்டுவிடுவ தென்ற முடிவுக்கும்வந்து ஒப்பந்தம் தங்களுக்குள்ளேயே செய்து கொள்ளுகிறார்கள். அதன்பின் ஒரு தலைவனைத் தேர்தெடுத்து அவனிடம் தங்கள் சுதந்தரம் உரிமைகள் முதலியவைகளை ஒப் படைக்கிறார்கள். இது எப்படி என்றால் ஒவ்வொரு மனிதனும் மற்றவனைப் பார்த்து “நம்முடைய பொது நன்மைக்காக என்னுடைய உரிமைகளையெல்லாம் இந்தத் தலை வனிடம் ஒப்படைக்கிறேன். அவன் என்னை ஆளுவதற்குச் சம்மதிக் கிறேன். அது போலவே நீயும் உன்னுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்து இந்தத் தலைவனுக்குக் கீழ்ப்படிய சம்மதிப்பாய் என்ற நிபந்தனையின் பேரில் தான், நான் இந்தக் காரியத்தைச் செய்கிறேன்” என்று சொல்லுவதாக ஹாப்ஸ் கற்பனை செய்து கொள்ளுகிறார். இதைத்தான்முதலாவது ஒப்பந்தம் என்கிறார்.

இரண்டாவது

இரண்டாவது செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் மக்கள் தாமாகவே வலியசென்று ஒருவனைத் தலைவனாக அல்லது மன்னனாகத் தேர் தெடுத்து அவனிடம் தங்கள் உரி மைக்காக மனப்பூர்வமாகஒப்படைப் பதால், இந்த ஒப்பந்தத்துக்கு அவன் கட்டுப்பட்டவனல்ல. ஆக வே எந்த ஒரு நிபந்தனையின் பேரி லும் மன்னன் தனக்குக் கொடுக்கப் பட்டிருக்கும்அதிகாரத்தைஏற்றுக் கொள்ளவில்லை. மக்கள் தான் அவனுக்குக் கீழ்ப்படிவதாக வாக் களிக்கிறார்கள். அதனால் அவன் ஆணைக்குக் கட்டுப்படக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால் மன் னன் யாருக்கும் வாக்குறுதியும் கொடுப்பதில்லை. அதனால் அவன் கொடுங்கோலனாக மாறினாலும்கூட அவன் ஏதோ வாக்கை மீறிவிட்ட தாகவோ அல்லது நிபந்தனைக்கு உட்படவில்லையென்றோ குற்றஞ் சாட்டிஅவனைமாற்றிவிடமுடியாது. ஆனால் மக்கள் தங்கள் வாக்கை மீறி மன்னனை எதிர்த்தால் அவர் களை தண்டிப்பதற்கு மன்னனுக்கு முழு அதிகாரமுண்டு.

இவ்வாறு, ஹாப்ஸ் தனது கொள்கையை மன்னரின் அதிகா ரத்தை நிலைநாட்டுவதற்கும், மக்க ளின் எதிர்ப்பை சட்டவிரோதமாக் குவதற்கும் வெளியிட்டார். மக்கள் சார்லஸ் மன்னனை எதிர்த்து நாட் டில் அமைதியைக் குலைத்ததின் விளைவை நேரில் பார்த்ததனால் தான் ஹாப்ஸ் இந்த முடிவுக்கு வந் தார். எக்காரணத்தை முன்னிட் டும் மன்னனை எதிர்க்கவேகூடாது என்றார்.

இயற்கையாகவே மனிதர், சுய நலமிகள், பிறரை ஏய்த்துப் பிழைப் பவர்கள் என்று நாம் எடுத்துக் கொண்டால், அவர்கள் சமுதாய வாழ்க்கைக்கு விரோதிகள், அதற்கு லாயக்கில்லாதவர்கள் என்றுதான் பொருள். ஹாப்ஸ் சொல்லுவதுபோல், இயற்கைநிலை யில் இவ்வளவு மோசமானநடத்தை யைக்கொண்டிருந்த மனிதர், திடீ ரென்று தங்கள் இயல்பான குணத்தை விட்டுவிட்டு சமாதான முள்ள அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டார்கள் என்றால், அதை எப்படி நம்பமுடியும்? அரிஸ் டாட்டல் சொல்லுவதுபோல் இயற்கையிலேயே மனிதன் கூட்டு வாழ்க்கையை விரும்புபவன், சமு தாய வாழ்க்கை உணர்ச்சி உள்ள வன் என்று எடுத்துக்கொண்டால் தான், அவன் அரசியல் சமுதாய வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டான் என்று சொல்வது நம்பத்தக்கதாகும்.

மேலும், இயற்கையிலேயே மிரு கம்போல வாழ்ந்தவன், முரட்டு சுபா வமுடையவன், ஒப்பந்தம் செய்த வுடன், திடீரென்று தனது இயல் பான குணங்களை விட்டுவிட்டு சமா தானப் பிரியனாக, கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு அமைதியை விரும்புகிறவனாய் மாறிவிடுகிறான் என்று ஹாப்ஸ் சொல்லுவதும் நம் பத்தகுந்ததல்ல..

சுயேச்சையாக, கட்டுக்கடங்கா மல் தன்னிச்சைப்படி இயற்கை நிலையில் திரிந்துகொண்டிருந்த வன், நினைத்தமாத்திரத்தில் தன்னை ஒரு தலைவனுக்கு நிரந்தர அடிமையாக, எதிர்ப்பதற்குக்கூட உரிமை வைத்துக்கொள்ளாமல் அடங்கி ஒடுங்கிவிடுகிறான் என்று ஹாப்ஸ் சொல்லுவதும் பொருத்த மாய்த் தோன்றவில்லை.

(தொடரும்)

இருந்தால்தானே!

சிந்ரியில் எருஉற்பத்தி அதிக மாகி வருகிறது.

விசாகையில் இரண்டு கப்பல் கள் தயார் செய்யப்பட்டன. ஒன்று, தயாரிப்பிலிருக்கிறது.

மேல்வங்கம்ரூபநாராயணபுரத்தி லுள்ள தந்திக்கம்பி உற்பத்தி சாலை, வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.

பிம்ப்ரியில் உள்ள பெனிசிலின் உற்பத்தி நிலையம் விரைவில் வேலை செய்யும்.

டில்லியிலிருக்கும் டி. டி. டி. உற் பத்தி நிலையம், விரைவில் உற் பத்தியிலிடுபடும்.

ரூர்கலாவில், விரைவில், எஃகு உற்பத்திக்கான புது ஆலை அமைக்கப்படும்.

மத்யப்பிரதேசத்திலும், கூடிய சீக்கிரத்தில், ரஷ்ய உதவியுடன் ஒரு எஃகு உற்பத்தி ஆலை அமைக்கப்படும்.

—என்று, பார்லிமெண்டை ஆரம்பித்து வைத்த ராசேந்திர பிரசாத், பட்டியல் கொடுத்திருக் கிறார்.

தென்னாட்டிலுள்ள ஒருஊரின் பெயரும் தென்படவில்லையே, என்கிறீர்களா?

இருந்தால் அல்லவோ குறிப் பிட! இங்கே, ஏது ஆலைகள்!!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும், ஆச்சாரியாரின் மனதில் ஒரு எரிச்சல் உருவாகிறது. அந்தப் பகுதி தான் ஆச்சரியமானது — அவரை, 'தியாகராய நகரிலேயே' அடைபடச் செய்த பகுதியும் அதுதான்.

அப்படிப்பட்ட 'ஒரு எரிச்சல்' அவருக்குமட்டும் என்றல்ல; பலருக்கும் இருந்துவருகிறது. அந்தப் பலர், யாரென்று கேட்கிறீர்களா? இதோ 'குறள் மலர்' எனும் திருச்சி ஏடு தெரிவிக்கிறது:—

விவாக சுபமுஹூர்த்தப் பத்ரிகை. தாஸஸ்ய விக்ஞாபனம்.

அடியேன் ஜ்யேஷ்டபுத்ரன் சிரஞ்சீவி ப்ரணதார்த்திஹரனுக்கு அர்த்தநாரீஸ்வரபுரம் ப்ரஹ்மஸ்ரீ............கனிஷ்டபுத்ரி சௌபாக்கியவதி பர்வதவர்த்தநியை பாணிக்ரஹணம் செய்து கொள்ள பகவத் க்ருபையால் நிஸ்சயித்திருப்பதால் தேவரீர் இஷ்டமித்ர பந்துஜன சமேதராய் விஜயம்செய்து வதூவரர்களை ஆசீர்வதித்து அடியேனையும் கௌரவிக்கும்படியாய் விநய பூர்வமாகப் ப்ரார்த்திக்கொள்கிறேன்.

விதேயன்,

....

இதை எடுத்துப்போட்டு, 'குறள் மலர்' தீட்டுகிறது, ''இதை அப்படியே வைத்துக்கொள்வதுதான் தமிழ் முன்னேற்றம் என்றால் தமிழ் அன்னை தான் தமிழைக் காப்பாற்ற வரவேண்டும்,'' என்பதாக.

'மலர்,' சுட்டிக்காட்டிய இதுபோன்ற அழைப்புகள், வேண்டுமென்றே, தீட்டிக்காட்டும் மனவளம் கொண்டோர், இன்னும் இருக்கிறார்கள் நாட்டில். அவர்களை யாரென்று, அறிமுகப்படுத்தவேண்டியதில்லை-அறிவார்கள், மக்கள்.

தமிழைக் கேலி செய்தவர்கள், அவர்கள்!

ஆண்டவனை அடைய, 'தேவ பாஷை' தவிர, தமிழால் முடியுமோ?-என்பவர்கள், அவர்கள்!!

இன்னும் இருந்துகொண்டிருப்பவர்கள்!!

அவர்களின், 'மனவளம்,' எழுத்தாளர் மாநாடு நடத்துகிறார்களே, அந்தக் கும்பலில் உள்ளோரில் பலருக்கும் உண்டு—இதையும், குறிப்பிட்டுக்கூற வேண்டியதில்லை — அறிவர், மக்கள்.

இதோ ஒரு நிகழ்ச்சி! மேல் சட்ட சபையில்!!

''மகாபலிபுரத்தை, மாமல்லபுரம் என்று மாற்ற சர்க்கார் உத்தரவிடுமா?''

''அப்படி மாற்றுவதால் கஷ்டம் தான் அதிகரிக்கும்.''

''மகாபலிபுரம் என்று சொல்வதற்கு அர்த்தமே இல்லை. வரலாறு, சான்று ஆகியவற்றை கவனித்து மாமல்லபுரம் என்று அழைப்பதே சரியானது.''

''ஊர்களின் பெயர் மாற்றத்தினால் கஷ்டம்தான் அதிகரிக்கும். எவ்வித பிரயோஜனமும் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.''

கேட்டவர், தோழர் கஜபதி அவர்கள்! பதிலளித்தவர், அமைச்சர் சுப்பிரமணியம்தான் — ஆச்சரியம் வேண்டாம்—'தமிழ் முழக்கும்' அதே சுப்பிரமணியம்தான்.

கஷ்டம் அதிகரிக்குமாம், பெயர் மாற்றத்தால்! சொல்லுகிறார், சுப்பிரமணியம். குருவின், சீடரல்லவா? நாற்றம் எங்கே போகும்? அதனால், நவில்கிறார்!

அண்மையில் வெள்ளி விழா கொண்டாடினார்களல்லவா — அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில். அங்கு, அதன் பெயரை முன்பெல்லாம், 'பல்கலைக் கழகம்' என்று சொன்னால், முறைப்பார்கள் — நமது மாணவ மணிகள் வாயில்மட்டும் எப்போதும் அப்பெயர் இருக்குமேயொழிய—பிறர், 'சர்வகலாசாலை' என்றே சொல்லுவார்கள். ஆனால், இப்போது, மாணவ மணிகளின் செயல், எல்லோருடைய எண்ணத்திலும் கலந்துவிட்டது. 'சர்வகலாசாலை,' என்போர், இல்லை! 'துணைவேந்தர்' என்று மித்திரன்கூட தீட்டுகிறதே ஒழிய, 'வைஸ்சான்ஸலர்' என்று குறிப்பிடுவதில்லை.

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் — அமைச்சர் சுப்ரமணியம், ஒரு ஐயோ பாவம்தானே? எப்படி இதனை அறியும்.

இதனை, பேராசிரியர் சேது, ஊர்களின் பெயர்களையெல்லாம் தமிழாக்கிய தோழர் அவினாசிலிங்கனார் ஆகியோரின் பார்வைக்கே விட்டுவிடுகிறோம். சுப்பிரமணியத்தை அடிக்கடி சந்திப்பவர்கள் அவர்கள், அதனால்!

ஆனால், நாம் குறிப்பிட விரும்புவது தமிழுக்கு உள்ள உண்மையான ஆபத்து — எதிரிகளிடமிருந்துகூட அல்ல; அதன் பெயர் சொல்லி வாழ்பவர்களிடமிருந்துதான்.

அதனை உலகம் போற்றச் செய்ய வேண்டும் என விரும்புவோர் உண்டு.

'அன்புத் தமிழ் மொழி எமது' என்று ஆனந்தமாக, எப்போதும் உள்ளத்தில் ஏந்திக்கொண்டிருப்பவர்கள் உண்டு.

அவர்கள் உண்டாக்கிய பாதையில் உல்லாச நடைபோடும் எண்ணமும், அந்த நேரத்தில், உள்ளத்தில் சலன புத்தியும் கொண்டு உலவுகிறார்களே அவர்கள்தான் தமிழுக்கு விரோதிகள்.

அப்படிப்பட்ட விரோதிகளுக்கு, தமிழ் ஒரு பொழுதுபோக்குப் பூங்கா.

அரசியல் அனாதைகளும், இடமின்றி அலையும் வேலையற்ற பிரபுக்களும், பெருமையையும் பூரிப்பையும் காட்டிக்கொள்ள வழியில்லாத சிலரும், அந்தப் பூங்காவுக்குப் போய் ஆகா, மலர் எப்படி தெரியுமா, இதன் மணம் எங்கு உண்டு தெரியுமா, என்றெல்லாம் மகிழ்ந்துவிட்டு, மலர்த் தோட்டத்துக்குள் மந்தி வருகிறதென்றால், ''காவல்காரா! காவல்காரா!!'' என்று கூப்பிட்டு காவலாளிடம் கூறிவிட்டு, காரில் ஏறிக்கொண்டு போய்க்கொண்டே இருப்பார்கள்.

அவர்களுக்கென்ன? காவல் செய்வதா, வேலை! களிப்பது!!

காவல்காரன் நிலையில் இருப்பவர்கள் நாம்.

மந்தி நுழைந்தபோது, எதிர்க்கத் தைரியமில்லாது எங்கோ ஓடிய, எத்தனையோ பேர்—எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவரையும் சேர்த்து —இருக்கின்றனர், என்பதை நாடு அறியும்.

மந்தியைக் கொண்டுவந்து விட்ட மந்த மதியினரைப் பற்றியும், நாடு, நன்றாக அறியும்.

அதனால்தான், அவர்கள் எல்லாம் கூடிக்கொண்டு, கூட்டம்போட்டு, சொற்பொழிவுகளைச் செய்யும்போது-ஒரு பக்கம் சிரிப்பும் வருகிறது! சிந்தையும் நோகிறது!

காவல்காரர்கள், காவலர்கள் ஆகத் துடிக்கும்காலமிது! இதனை, 'பொழுதுபோக்காளர்'கள் உணர்ந்துகொள்ள வேண்டும்! எதற்கும், நம்மையும் நமது தமிழ்ப் பரம்பரையையும், அலட்சியம் செய்யலாம், 'அவர்கள்'. ஆனால், தமிழ் வாழ்வது யாரால்—எப்படி— என்பதை, நாடு அறியும். அது போதும், நமக்கு! ஆனால் தமிழுக்கு ஆபத்தென்றால், அங்கத்தை ஆமையாக்கிக்கொள்பவர்கள், தமிழை வளப்படுத்தப் போகிறார்களாம்! ஆச்சரியமாக இருக்கிறதா? ஆச்சாரியார்கள் இருக்கும்வரை இப்படிப்பட்ட சம்பவங்கள் பல ஏற்படும்-தமிழ் அவதிப்படும்!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.